# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் - 3 இதழ் - 3 பிப்ரவரி 2024



# ஸ்ரீ விசாலம் சிட் :.பண்ட் லிமிடெட்

நம்பிக்கை, நாணயம், நேர்மை, நிலையான தன்மையுடன் மக்கள் சேவையில்

## “தலைமுறைகளை கடந்து வாழ்வின் சவால்களை எதிர்கொள்ள உங்களுடன்”

ஒன்றாக நாம் வளர்வோம்

**ரூ.1,00,000/-**
முதல்
**ரூ.1,00,00,000/-**

வரையிலான மதிப்புள்ள சீட்டுகளை சிறந்த முறையில் நடத்தி வருகிறோம்



77th ANNIVERSARY

எங்களின் வெற்றிப்பயணத்தில் மேலும் ஓர் மைல் கல் உங்களுடன்...

SREE VISALAM CHIT FUND LTD. SVCF ESTD 1947 REGD. TIRUNELVELI


பதிவு அலுவலகம்:
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474

நிர்வாக அலுவலகம்:
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

மத்திய அலுவலகம்:
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

WWW.SREEVISALAM.COM +91 86670 03356

# விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

நகரத்தார் வாசிப்பின் ஓர் அங்கமாக மாதந்தோறும்
நாம் நகரத்தார் மின்னிதழ் உலகளவில் வெளிவருகிறது.
பெரும்பான்மை நகரத்தார்களை சமூக இணையதள
ஊடகங்களின் வழி எளிதில் சென்றடையும்
நமது மின்னிதழில் உங்கள் நிறுவனம் மற்றும் தாங்கள்
சார்ந்த விளம்பரங்கள் இடம்பெற்றால் உலகளாவிய
நகரத்தார்களை எளிதில் சென்றடையும் .

நமது இதழில் விளம்பரம் செய்ய

ஒரு பக்க விளம்பரத்திற்கான
கட்டணம் ரூபாய் 350/= மட்டுமே

ஓர் ஆண்டிற்கு ( 12 இதழ்கள் ) விளம்பரத்திற்கான
கட்டணம் – ரூபாய் 4000/= மட்டுமே

குறைந்த செலவில் தங்களது விளம்பரங்களை
நமது மின்னிதழில் வெளியிட்டுப் பயன் பெறுங்கள்.

**மேலும் விபரங்களுக்கு**

9791776534
naamnagarathar@outlook.com

# வளவுக்குள்...

அன்பு வாசகர்களுக்கு ,

வணக்கம் .

ஓவ்வொரு விசேஷத்திலும் நம் வீட்டு வளவுக்குள் நமது உறவுகளைச் சந்தித்து மகிழ்வு கொள்வதைப் போல் , ஒவ்வொரு மாதமும் இம்மின்னிதழ் வாயிலாக வாசக உறவுகளாகிய உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி !

காதலைப் போற்றும் மாதமிது .காதல் எத்தனை அழகானது . காதலைப் பாடாத கவிஞர் தானேது?

தன்னையே காதலிப்பவன் உலகை காதலிப்பான் .
தன் குடும்பத்தை நேசிப்பவன் மக்களை நேசிப்பான் .
தனது தொழிலைக்காதலிப்பவன் வாழ்வில் முன்னேற்றம் அடைவான்
தன் உழைப்பை காதலிப்பவன் வாழ்வில் உயரம் எட்டுவான் .
புத்தகங்களைக் காதலிப்பவன் அறிவை அறுவடை செய்வான் .
இயற்கையை காதலிப்பவன் வளங்களைப் பெறுவான் .
இறையை காதலிப்பவன் வரங்களைப் பெறுவான் .
ஆதலால் என்றும் நாம் காதல் செய்வோம்.

வழக்கம் போல் தங்கள் அனைவரது வாசிப்பை கவரும் வகையில் இந்த இதழை தேர்ந்தெடுக்கப்பட்ட பல ஆக்கங்களுடன் வெளியிடுகின்றோம்.

நகரத்தார்களின் வாசிப்பை வளர்க்கும் விதத்தில் தொடரும் எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம். இதழை தொடர்ந்து வாசிப்பதோடு மற்ற நகரத்தார்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்.

வாசகர்களாகிய உங்களில் பல சிறந்த படைப்பாளிகள் உள்ளனர் . உங்களின் படைப்பாற்றலை உலகுக்கு தெரிவிக்க ஒரு அரிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதில் நாம் நகரத்தார் மின்னிதழ்

பெருமை கொள்கிறது. உங்களை படைப்புக்களை எங்களுக்கு மின்னஞ்சல் வாயிலாக எழுதி அனுப்புங்கள் . தேர்ந்தெடுக்கப்படும் படைப்புகள் வரும் இதழ்களில் வெளியிடப்படும் .

மேலும் நமது மின்னிதழின் வளர்ச்சியில் பங்களிக்கும் வகையில் மலரில் விளம்பரம் செய்ய விரும்புபவர்கள் மலரின் மின்னஞ்சலிலோ அல்லது வாட்ஸாப் எண்ணிலோ தொடர்பு கொள்ளவும் .

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம் .

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,

நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!



அன்புடன்

இராம.சொக்கலிங்கம்

பதிப்பாசிரியர்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram


www.maynadiamonds.com
• +91 94426 07043
• +91 94430 42634
GRAND
SALE
SPECIALLLY CRAFTED
MAYNA
DIAMONDS
CUSTOMISED DIAMOND JEWELLERY
www.mayandiamonds.com • 9442607042 • 9443042634
Cassic yet Tendy....



# நாம் நகரத்தார்

**சமூக இணையதள மின்னிதழ்**


மலர் : 3  இதழ் : 3  பிப்ரவரி 2024

இலவச வெளியீடு

**பதிப்பாசிரியர்**

இராம.சொக்கலிங்கம்
நற்சாந்துபட்டி

---

**இதழாசிரியர்**

உமையாள்

---

**ஆலோசகர்**

இளமுகில். நாராயணன்
தேவகோட்டை

---

**இதழ் வடிவமைப்பு**

ப. சுந்தரமகாலிங்கம்

---

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்
மின்நூல் வெளியீட்டாளர்கள்
172 – D மேட்டுப்பாளையம் சாலை
நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,
கோயம்புத்தூர் – 641043.


---


**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534


---


கட்டுரைகள் மற்றும் இதர
படைப்புகளுக்கு
படைப்பாளர்களே பொறுப்பு.
விளம்பரங்கள் விளம்பரதாரரின்
பொறுப்பில் வெளியாகின்றன.

**நமது சிந்தனைக்கு**

- பாதயாத்திரைகள் மனிதனை பக்குவப்படுத்துகிறதா?
  இல்லை பயப்பட வைக்கிறதா? – கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா ... 10

**மொழி**

- வாங்க பேசலாம் – பேரா கு. அன்பு மெய்யப்பன் ................................ 19

**கவிச்சோலை**

- நமது இந்தியா – அரு. சிவகாமி இராமனாதன் .................................. 26
- சமூகமாவது சுற்றமும் நட்பும் – கவிச்சுடர் தஞ்சை பழ.வள்ளியப்பன் .... 40
- இணையில்லா கண்ணதாசன் – கவிஞர். எம்.சோலை ......................... 48

**வாழ்வியல்**

- பெண் கதவு ஆண் பூட்டு – சேவு.முத்துக்குமார் .................................. 27

**உணவே மருந்து**

- வாழ்வை வளமாக்கும் வல்லாரை ....................................................... 34

**பக்தித்தொடர்**

- கண்ணனை தாக்கிய அம்பு – புலவர் த. கோவேந்தன், டி.லிட் ............. 41

**பண்பாடு**

- நகரத்தார் திருமணம் – அண. சீனிவாசன் ........................................... 44

**சிறுவர் பக்கம்**

- மழலையர் மழைத்துளிகள் – கல்லல். மீ. மணிகண்டன் ...................... 49

**ஆன்மிகம்**

- வாழ்வை வளமாக்கும் மகா சிவராத்திரி
  – இராம. சொக்கலிங்கம் .......................... 50

**நிதிமேலாண்மை**

- பணம் சம்பாதிக்கலாம், பங்கு சந்தையில்... – க. ஹர்ஷவர்த்தினி ஸ்ரீ ... 56

**ஜோதிடம்**

- நீங்கள் எப்படி .. ரிஷப லக்கினம் – ஜோதிடர். எல்லி ......................... 65

PM
SWITCH TO THE FUTURE

# PALLATHUR MOTORS LLP








மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735

பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

# பாதயாத்திரைகள்

## மனிதனைப் பக்குவப்படுத்துகிறதா ? இல்லை பயப்பட வைக்கிறதா?

– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.



ஆன்மிகத்தை வளர்ப்பதில் எத்தனையோ வழிகள் உண்டு. அதில் ஒரு வழிதான் பாதயாத்திரை சென்று இறைவனை வழிபடுவது. தன்னை வருத்திக் கொண்டு, விரதமிருந்து தாங்கள் வழிபட விரும்பிய திருத்தலங்களிலுள்ள தெய்வத்தை தரிசனம் செய்வதற்காக பல்லாண்டுகளாக பக்தர்கள்பாதயாத்திரை சென்று வருகிறார்கள்.

நகரத்தார்கள் பல்லாண்டுகளாகத் தங்கள் முன்னோர்களின் வழிகாட்டுதல் படி, பழனிக்கும்,வைத்தீஸ்வரன் கோவிலுக்கும் பாதயாத்திரை சென்று வந்தார்கள்.

இதனைத் தொடர்ந்து இன்று பல்வேறு ஊர்களில் அமைந்துள்ள திருத்தலங்களுக்கு பாதயாத்திரையாகச் சென்று சுவாமி தரிசனம் செய்து வருகிறார்கள். போக்குவரத்து வசதிகள் இல்லாத அந்தக் காலத்தில்,மாட்டு வண்டி கட்டிக்கொண்டு வைத்தீஸ்வரன் கோவிலுக்கு பாதயாத்திரை சென்றார்கள் நகரத்தார்கள். தான் செய்த உப்பு வியாபாரம் அமோகமாக நடந்த காரணத்தால்,தனது நேர்த்திக்கடனை நிறைவேற்ற பழனிக்கு பாதயாத்திரை சென்று வந்தார் நகரத்தார் ஒருவர்.



அவரைத்தொடர்ந்து பலரும் பாதயாத்திரை சென்றார்கள்.அதன்பின் காவடிகட்டி, அதனைத் தோளில் சுமந்து பழனிக்கு பாதயாத்திரை சென்றனர் நகரத்தார்கள். பின்னாளில் அந்த யாத்திரை வேலின் துணையோடு, சுவாமியாடிச் செட்டியார் முன்னே செல்ல,காவடிகள் பின்னேவர பழனி பாதயாத்திரையாக இன்றுவரை மிகச்சிறப் போடு நடைபெற்று வருகிறது. பாதயாத்திரை செல்வோர்களின் பசியை ஆற்றுவதற்காக பல்வேறு பெருமக்கள் பாதயாத்திரையின் வழி முழுவதும் அன்னதானம் செய்து பசியாற்றும் திருப்பணியையச்செய்து வருகிறார்கள். பக்தர்களுக்குத் தேவைப்படும்

மருத்துவ வசதிகளையும் பலர் பாதயாத்திரையின் வழிநெடுகிலும் ஒரு போற்றுதலுக்குரிய பணியாகச்செய்து வருகிறார்கள்.

காவடி தூக்கிவருவோர்க்கு தேவையான வசதிகளையும் உதவிகளையும் சில அமைப்பினரும்,முன்பு காவடி தூக்கிச்சென்ற அன்பர்களும் ஓடோடிச்சென்று, அருகிலிருந்து உதவி வருகிறார்கள்.




இதுபோன்ற பாதயாத்திரைகளில் பங்கு பெறும் பக்தர்கள் மட்டுமல்லாது,வெளியிலே நின்று உதவி செய்யும் அனைவருக்கும் ஒரு பக்குவத்தை கற்றுத் தருகின்றன இந்த பக்திமிக்க யாத்திரைகள்.

இந்த பாதயாத்திரையை தங்களின் நேரத்தை போக்குவதற்காகவோ அல்லது வேடிக்கையாக விளையாடிச்செல்வதற்காகவோ,அல்லது கூடிமகிழ கிடைத்த ஒரு வாய்ப்பாகவோ,இதனைப் பயன் படுத்திக்கொள்ள யாரும் நினைப்பதில்லை. ஏன்என்றால் அவ்வளவு எளிதான யாத்திரை அல்ல இந்த பாதயாத்திரை. பக்தியைத்தவிர வேறு எதற்காகவும் இதனைப் பயன்படுத்திக் கொள்வோரை,பழனி ஆண்டவன் சோதித்து பார்த்துவிடுவான்.

தினமும் நடைப்பயிற்சி மேற்கொள்வதைப்போல இரண்டு அல்லது மூன்று கிலோமீட்டர் நடப்பது அல்ல இந்த பாதயாத்திரை. நடைப்பயிற்சியின் போது காலில் செருப்போ அல்லது ஷுவோ அணிந்து கொண்டு நடப்பதுபோல, பக்தியாத்திரையில் காலில் செருப்பணிந்து நடக்க முடியாது.



பாதயாத்திரையில் பங்குபெற்றுச்செல்வதற்கு,நம்மை முதலில் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்காகத்தான் சில கட்டுப்பாடுகளை, விரத முறைகளைப்பின்பற்ற வேண்டும் என்று நமது முன்னோர்கள் நெறிப் படுத்தியுள்ளார்கள்.

இன்றைக்குப் போக்குவரத்து வசதிகள் பெருகிவிட்டன. சாலைகளின் தரம் உயர்ந்து காணப்படுகிறது. வழிப்பாதைகளில் ஆங்காங்கே தேநீர் கடைகள்,உணவகங்கள் உள்ளன. மின்விளக்கு வசதிகளும்,கழிப்பிட வசதிகளும் சிறு சிறு ஊர்களைக் கடக்கின்ற பொழுது கிடைக்கின்றன.திருடர்கள் பயம் சிறிதுமில்லை. இரவிலே பக்தர்கள் ஓய்வு எடுப்பதற்கு கோவில் மண்டபம், பொது அமைப்பு வளாகம் ஆகியவைகள் உள்ளன.

இப்படி வசதிகள் பெருகி,எளிதாகக் கிடைக்கின்ற காலத்திலும், பழனிபாதயாத்திரை, வைத்தீஸ்வரன் கோவில் பாதயாத்திரைகளில் பங்கு பெறும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிவருகிறது என்றால் இதற்கு என்ன காரணம்? என்று நாம் சிந்திக்க வேண்டும்.

ஆசைகளால் உந்தப்பட்ட மனிதன்,அதனை அடைவதற்காக அலைகிறான். அதற்காக பல தவறான வழிகளைப் பின்பற்றுகிறான். இறுதியில் தனது செயல் தவறு என்று உணருகிறான். தவற்றை உணர்ந்தமனிதன் தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ள இதுபோன்ற யாத்திரைகளில் பங்கு பெறுகிறான். இப்படிப்பட்ட யாத்திரைகளில் பங்கு பெறும் மனிதன் குறைந்தது 16 நாட்கள் விரதம் மேற்கொள்கிறான். காலில் செருப்பு அணியாமல் நடந்து பழகுகிறான்.

தன்னை ஒப்பனைப்படுத்திக் கொள்வதிலும்,ஆடை அலங்காரம் செய்து கொள்வதிலும் ஆர்வம் காட்டாமல், பச்சை நிறத்திலோ அல்லது வேறு நிறத்திலோ வேட்டியும் சட்டையும் அணிந்து கொண்டு, முடிவளர்ந்த முகத்தோடு வாழத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்கிறான்.எந்த நிலையையும் தாங்கிக் கொள்ளும் பக்குவத்தை இந்த விரத காலம் பக்தனின் மனதிலே ஏற்றிவிடுகிறது.

இப்படிப்பட்ட மனிதன், தான் பங்குபெறும் யாத்திரையில் தன்னோடு வருபவர்களை உறவாக எண்ணி, எவருக்காவது துயர் ஏற்பட்டால் உதவ முன் வருகிறான். தனக்குக் கிடைத்த உணவை மற்றவர்களோடு பங்கிட்டுக் கொள்கிறான்.



பக்தர்களிடம் விரதம் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளைச்சொல்லிக்கொடுத்து பெரியவர்கள், சிலவற்றை கட்டுப்பாடுகள் என்ற பெயரில் தெரிவித்து பக்தர்களை அச்சப்படுத்தி வைத்துள்ளார்கள். காரணம் இது போன்றகட்டுப்பாடு களை விதித்தால்

மட்டுமே,பாதயாத்திரையில் கலந்து கொள்வோர் தவறு ஏதும் செய்துவிட மாட்டார்கள் என்று நம்புகிறார்கள்.

காலமாற்றத்திற்கு ஏற்ப, சூழ்நிலைகளைக்கருத்தில் கொண்டு சிலவற்றிலுள்ள கட்டுப்பாடுகளை தளர்த்த வேண்டும் என்பது காலம் நமக்கு உணர்த்தும் உண்மையாகும். சில தளர்வுகளைத்தருவதால் யாத்திரையின் மகிமைக்கு குறைவு ஏற்பட்டு விடாது. பழனிபாதயாத்திரையை சிலர் முன்னின்று சிறு சிறு குழுக்களாக நடத்தி வருகின்றனர். அதிலும் பக்தர்கள் தங்களின் வசதி கருதி கலந்து கொள்கிறார்கள்.



அப்படி ஒரு குழுவில் நடந்து சென்றனர் மூன்று பெண்களும், இரண்டு ஆண்களும். அவர்கள் ஒருவருக்கு ஒருவர் அறிமுகம் ஆனவர்கள். இந்த ஐவரும், ரெட்டியார் சத்திரத்தில் மதியம் தங்கிவிட்டு, குழந்தை வேலன் சன்னிதியை நோக்கி நடந்து செல்லத்தொடங்கினர். சிறிது தூரம் சென்றவுடன்,முன்னே சென்று செட்டியார் ஒருவரை பின்னேவந்த இரண்டு சக்கரவாகனம் ஒன்று இடித்து தள்ளி கைமுறிவுக்கு ஆளாக்கி விட்டுப்போய்விட்டது. அடிபட்ட செட்டியார் மயக்கமுற்று கீழே விழுந்து விட்டார்.

பின்னே சென்ற நால்வரும் அவரது நிலையைக்கண்டு அஞ்சி,குழுவின் அமைப்பாளர்களைத் தொடர்பு கொண்டனர். 108க்கு போன் செய்து வண்டியை வரச்சொல்லி, அவரை திண்டுக்கல்லுக்கு அனுப்பி வையுங்கள் என்று சொல்லி விட்டனர்.

அவர்களை உதவிக்கு அழைத்தபோது,அவர்கள் சொன்னதுதான் வேடிக்கை. அவரோடு நாங்கள் வேனில் ஏறிச்சென்றால் எங்கள் பிராத்தனை நிறைவேறாது. அடுத்த ஆண்டுதான் நாங்கள் பாதயாத்திரை வரமுடியும். நீங்கள் யாராவது வேனில் ஏறிச்சென்றாலும் உங்களின் பிராத்தனையும் நிறைவேறாது என்று எச்சரித்தனர். எச்சரிக்கும் நேரமா அது?



உச்சரிப்பது முருகனின் திருநாமத்தை அல்லவா? அச்சத்தைத் தவிர்த்து, ஆதரவாய்ப்பேசி, அடுத்தகட்ட முயற்சிகளை எடுக்காமல் அவரோடு உடனிருந்த பக்தர்களை அச்சப்பட வைத்துவிட்டனர் அமைப்பாளர்கள்.

அவரின் குடும்பத்தாருக்கு தகவல் சொல்லிவிட்டு, அவரைமட்டும் வேனில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பிவையுங்கள் என்று சிறிதும் இரக்கமில்லாமல் சொல்லிவிட்டு, மற்றவர்களோடு தங்களின் யாத்திரையைத் தொடர்ந்து விட்டனர்.

உடன் வந்த நால்வரும் பக்குவப்பட்டு இருந்த காரணத்தால்,அவரோடு வேனில் பயனித்து, அவரை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு,அவரது குடும்பத்தார்கள் வந்தவுடன் விவரத்தைச்சொல்லிவிட்டு, அங்கிருந்து ஒரு சிற்றுந்து மூலம் எந்த இடத்தில் விபத்து ஏற்பட்டதோ அங்கே வந்து இறங்கி,மீண்டும் நடக்கத்தொடங்கி நள்ளிரவு நேரத்தில் குழந்தை வேலன் சன்னிதியைச் சென்று சேர்ந்தனர். பின் பழனி சென்று, ஆண்டவனை தரிசித்து வீடு சென்றனர்.

பாதயாத்திரையாக நடந்து வருவோரில் யாருக்கவது அசம்பாவிதமாக, ஏதாவது விபத்து ஏற்பட்டு விட்டால், உடன் வருபவர்கள் உதவாமல் செல்ல முடியுமா? அல்லது அதைப்பார்த்து சகித்துக்கொள்ள முடியுமா?

அடிபட்டவருக்கு உதவ முடியாதோர், விருப்பம் இல்லாதோர்,பேசாமல் போனாலும் கூட வருத்தப்பட வேண்டியது இல்லை. அதற்கு மாறாக உதவ முன் வரும் சிலரை, சிலவற்றைச் சொல்லி தடுப்பது எந்த வகையில் நியாயம்? மனித நேயத்தோடு அவரோடு சென்று உதவிய நால்வரின் பாத யாத்திரையை பழனி ஆண்டவன் தடுத்தானா? இல்லை தண்டித்தானா?

ஆண்டவனின் பெயரைச் சொல்லி சில தவறான கட்டுப்பாடுகளை விதித்து பக்தர்களை பயம் கொள்ளச் செய்யாதீர்கள். கண்ணப்பன் சிவலிங்கத்தின் கண்ணில் இருந்து ரத்தம் கசிந்த போது, பார்த்துக்கொண்டு சும்மா நிற்கவில்லை. கல் வடிவத்தில் இருந்த லிங்கத்தின் கண்ணில் வந்த ரத்தத்தைக்கண்டு, கொஞ்சம் கூட பதற்றமின்றி தன் கண்ணையே பிடிங்கி வைக்க முன்வந்தானே அவன் தானே சிறந்த பக்தன். அதுபோல ஒரு பக்தன் துயர் உற்றால் அவனுக்கு எந்த நிலையிலும் உதவி செய்வதே இன்னொரு பக்தனின் கடமையாகும். அதுவே மனித மான்பாகும். மனிதனிடம் கடவுள் பக்தியை வளர்ப்பது முக்கியம் என்றாலும், அதைவிடச்சிறப்பு, மனிதனிடம் மனித நேயத்தை வளர்ப்பதே முக்கியம். பாதயாத்திரைகள் மனிதனை ஒரு நாளும் பயம் கொள்ள வைத்திடக் கூடாது மாறாக எந்த நிலையிலும், மனிதனை பக்குவப்படுத்தி பண்படுத்த அது உதவவேண்டும்.

மீண்டும் சந்திப்போம் நண்பர்களே! நல்ல கருத்துக்களை நாளும் சிந்திப்போம்!



கட்டுரை ஆசிரியர்
தொடர்புக்கு: 9791033913,
aamchennai@gmail.com

உ

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

VALATHI
Since 2005

## ஸ்ரீ முத்துமீனா சிட்பண்ட்ஸ் (பி)லிட்.

இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.

**எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு**

**ரூ.1,00,000/- முதல்**

**ரூ.25,00,000/- வரை**

அதிகபட்ச உச்சவரம்பு 25% முதல் 40% வரை

பதினேழு (17) ஆண்டு கால நம்பிக்கை! நாணயம்! நேர்மையான அணுகு முறை!

**பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை.**

0431-2760064,80 3580292,7968005.

துவக்கம் 2005

94439 86143

# TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.

## SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,

C-95, மூர்த்தி ஸ்கொயர், முதல் தளம்,
5வது கி ரா ஸ் தில்லைநகர் மெயின் ரோடு,
MPM ஸ்டோர்ஸ் மாடியில் திருச்சி - 620 018.
Cell : 94439 86143

9/1, (4/1) அருணோதயா அபார்ட்மெண்ட்,
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093.
Cell : 91235 71029,

50, தெற்கு மாரட் வீதி,
(ஸ்டேட்பேங்க் ஏ.டி.எம் மாடியில்)
மதுரை - 625 001. Cell : 93616 07776, 89034 90064

tvcfpl@gmail.com www.valathichitfunds.com

★ சத்தியமேவ ஜெயதே ★



# வாங்க பேசலாம் !

- பேரா.கு.அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

(செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள்)

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப் பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம்...வாங்க பேசலாம்..!

## கோயில் மாலை

திருமணங்களின் போது நகரத்தார் மட்டுமே பயன்படுத்துகின்ற ஓர் வார்த்தை. பங்காளி மூத்த மகனுக்கு நீங்கதான் பாக்கு வச்சி கோயில் மாலை வாங்கிட்டு வந்தீங்க, ரெண்டாவது மகனுக்கு நீங்கதான் பாக்கு வச்சி கோயில் மாலை வாங்கிட்டு வரனும். நீங்க வாங்குறதுதான் எங்கு குடும்பத்துக்கு ராசி என்று நம்மவர்கள் பேசக் கேட்டிருப்போம்.



திருமணத்திற்கு மூன்று நாள்களுக்கு முன்னர் இரு வீட்டைச் சார்ந்தவர்களும் அவரவர்களின் நகரக் கோயில்களுக்குத் தங்கள்

பங்காளிகளில் ஒருவரை அனுப்பி, தங்கள் கோயில் , பிரிவு, ஊர் , முகவரி, திருமணம் நடைபெறும் நாள், நேரம், இடம் முதலிய விவரங்களைக் கோயிலில் உள்ள பதிவேட்டில் குறித்து அதற்குரிய காணிக்கையைச் செலுத்தி வருவர்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப் பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம் ...வாங்க பேசலாம் ..!



இத்திருமணத்தை ஒப்புக் கொண்டு, கோயில் புள்ளியாகச் சேர்ந்துக் கொண்டதற்கு அறிகுறியாகத் திருமணத்திற்கு முதல் நாள் இரண்டு கோயில்களில் இருந்தும் உரிய கோயிலைச் சார்ந்த பணியாளர்களின் மூலமாக மாலை, விபூதி, பிரசாதம் முதலியன கொண்டு வந்து தருவார்கள்.

இது மிகச் சிறந்ததொரு கட்டமைப்பு. நகரத்தார்களில் திருமணமானவர்களின் புள்ளி விவரங்கள் ஒவ்வொரு கோயிலிலும் புள்ளி என்ற பெயரில் பராமரிக்கப்பட்டு வருவது சிறப்புக்குரியது. நகரத்தார்களில் திருமணமானவர்கள் எத்தனை பேர் என்பதை உடனடியாக அறிந்து கொள்ள முடியும். நம் இனத்தாரிடம் மட்டுமே இவ்வழக்கம் உள்ளது நாம் பெருமைப்பட வேண்டிய விடயம்.

## புள்ளி

திருமணமான ஆணும் பெண்ணும் சேர்ந்த குடும்பம் ஒரு புள்ளி என அழைப்பது நம்மவர் வழக்கம். நாங்க மொத்தம் 96 புள்ளி இருக்கோம் என்பது போன்று நகரத்தார்கள் தங்களுக்குள் பேசுவதை



அடிக்கடி கேட்டிருக்கமுடியும். நகரத்தார்களின் பிரிவுகளில் நடக்கின்ற திருமணங்கள் மட்டுமே புள்ளியாகக் கணக்கிடப்படும். ஒரு நகரத்தாரும் நகரத்தார்அல்லாத பிரிதொரு இனத்தைச் சேர்ந்தவர்க்கும் நடக்கின்ற திருமணம் புள்ளியாகக் கருதப்படமாட்டாது. இம்முறை கலப்புத் திருமணங்களைத் தடுக்கவே நம்மவர்களால் இம்முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

புள்ளிகளில் இரண்டு விதம் உண்டு.

1. முழுப்புள்ளி

2. அரைப்புள்ளி

முழுப்புள்ளி :

ஐந்து வகையான குடும்பங்கள் முழுப்புள்ளியாகக் கருதப்படுகிறது.

1. திருமணமாகாத குழந்தைகளுடன் உள்ள பெற்றோர்கள்

2. குழந்தைகள் இல்லாத கணவன் மனைவி

3. குழந்தைகள் உள்ள கைம்பெண்

4. குழந்தைகள் உள்ள அலலது இல்லாது இருக்கும் மனைவியை இழந்தவர்

5. பெற்றோர்கள் இல்லாத குழந்தைகள் ஆகியோர் முழுப்புள்ளியாகக் கருதப்படுகின்றனர்.

"இன்றைய சேமிப்பு நாளைய முதலீடு"



# PL RAMANATHAN (KANDANUR)

**INSURANCE ADVISOR**
**LIC of india, Thiruvotriyur Branch**
**Mobile : 99 40 132 132**

- ★ To take care of Childresn's Education
- ★ To Create Corpus for Child' marriage
- ★ To Create Corpus for Retirement Expenses
- ★ To save your Taxes at the time of Investment & Maturity

## LIFE INSURANCE CORPORATION OF INDIA

Off Thiruvottriyur Branch "Jeevan Pallava", No. 142, 143 & 144, T.H. Road, Tondiarpet, Chennai-81. Resi:: G-1, Plot No. 15, Door No. 10, Teachers Guild Colony, Villivakkam, Chennai-49.
Tel.: (O) 2345 1530 (M) 99401 32132
E-mail: ourlicplr@gmail.com, licplr@yahoo.com

LIFE INSURANCE CORPORATION OF INDIA

அரைப்புள்ளி :

1. குழந்தைகள் இல்லாத கைம்பெண் மற்றும்

2. திருமணமான மகள், மகன் உடைய கைம்பெண் ஆகியோர் அரைப்புள்ளியாகக் கருதப்படுகின்றனர்.

## திருப்பூட்டுதல்

நகரத்தார்களின் திருமணங்களில் பல வட்டாரச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் ஒன்று, திருப்பூட்டுதல் திரு என்னும் சொல்லுக்குப் பல பொருள் உண்டு.1.திருமகள், 2.செல்வம், 3.சிறப்பு, 4. அழகு, 5. பொலிவு, 6.பாக்கியம் என்ற பல பொருள் உண்டு. இங்கு திரு என்பது தாலியைக் குறிப்பிடுகிறது. மணமகளுக்கு தாலி கட்டுவது திருப்பூட்டு என அழைக்கப்படுகிறது.

சுற்றத்தார் முன்னம் நீ திருப்பூட்டியது என்று தஞ்சைவாணன் கோவை அதே சொல்லை குறிப்பிடுகிறது. கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பொய்கையார் என்பவரால் எழுதப்பட்டது இந்நூல். இன்றிலிருந்து 1000 ஆண்டுகளுக்கு முற்பட்டது இச்சொல். அத்தகைய பழஞ் சொல் இன்றுவரை நம்மவரால் பேசப்படுவது பாராட்டுக்குரியது.



திருப்பூட்டும் வைபவம் இன்று வரை நம்மவர்களால் ஒரு ஒழுங்கு முறையோடு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. மணப் பெண்ணுக்கு மணமகனின் அம்மா, கொண்டு வந்த ஆடைகளை அணிந்கொள்ளச் செய்து, அம்மணப் பெண்ணை கிழக்கு முகமாக நிற்கச் செய்வார்கள். அதன் பிறகு மணமகனை அழைத்து வந்து மணமகளுக்கு எதிராக நிற்கச் செய்வார்கள். மணமகள் தன் இரு கைகளிலும் பச்சரிசி, தேங்காய் முதலியவற்றை வைத்திருப்பாள். மணமகன் கோயிலிருந்து

கொண்டுவரப்பட்ட திருநீற்றை தானும் பூசிக் கொண்டு, மணமகள் நெற்றியிலும் பூசி விடுவது வழக்கம். பின்னர் கோயில் மாலையை மணமகள் கழுத்தில் அணிவிக்கச் செய்வர்.

வயதில் பெரிய ஒருவர் எடுத்துத் தருகின்ற கழுத்துருவை மணமகன் மணப் பெண்ணின் கழுத்தில் அணிவித்து மூன்று முடிச்சுகள் இட வேண்டும். அப் பொழுது கெட்டி மேளம் வாசிப்பார்கள். (கேட்டி மேளம் ஏன் வாசிக்கிறார்கள் என்பது பலரும் அறியாத ஒரு செய்தி. திருமணம் என்பது ஒவ்வொரு ஆணின் ஒவ்வொரு பெண்ணின் வாழ்வில் முக்கியமான ஒரு நிகழ்வு. அரும்பாடுபட்டு பெற்றோர்கள் இரு மனங்களை இணைத்து வைக்கின்றனர். அவர்கள் திருப்பூட்டிய பிறகே கணவன் மனைவியாகிறார்கள். அப்படிப்பட்ட ஒப்பற்ற அந்த நிகழ்வு நடைபெறும் போது பலரும் கூடியிருக்கும் திருமண வீடுகளில் பலரும் அமங்கலமான சொற்களைப் பேச்சுவாக்கில் பேசிவிடும் வாய்ப்பிருக்கிறது. ஆகவே, திருப்பூட்டுகின்ற முக்கிய தருணத்தில் அவை காதில் விழா வண்ணம் கெட்டி மேளம் அதிக ஓசையுடன் வாசிக்கப்படுகிறது) பிறகு சிறு தாலியை அணிவிப்பது வழக்கம்.

மணமக்கள் இருவரும் மூன்று முறை மாலை மாற்றிக் கொள்வர். அன்று முதல் கணவன் மனைவியாக சமுதாயத்தில் அங்கீகரிகப்படுவர். இத்தகைய சிறப்பு மிக்க, பார்த்துப் பார்த்து நம் அய்யாக்களால் ஏற்படுத்தப்பட்ட சடங்குகளைக் கொண்டே இன்றையத் திருமணங்களும் நடைபெறுகின்றன. ஆனால், பல திருமணங்கள் இடையிலேயே தடம் மாறிவிடுகின்றன. நம் சமூகத்திற்கு ஓர் இழுக்காக இச்செயல் அதிகம் நடைபெறுகிறது. இத்தகைய நிகழ்வுகள் தொடரக் கூடாதெனில் நம் சமூகத்தின் கட்டமைப்புகளையும், அவற்றின் இன்றியமையாமையையும் நம் இளைஞர், இளைஞர்களிடம் கொண்டு சேர்ப்பது நம் ஒவ்வொருவரின் கடமை.

– தொடர்ந்து பேசுவோம்

# ஸ்ரீ நித்யகல்யாணி சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

Sign of Commitment

SRI NITHYAKALYANI CHIT FUNDS (P) LTD.

NKF

## Our culture is financial Discipline

Money is Easier when your
Proactive Plan with Nithyakalyani

1983 - 2024
42nd
ANNIVERSARY

1 Lakhs to Crore

**Sri Nithyakalyani Chit Funds(P) Ltd.,**

#22, Lakshmi Road, TVS Nagar,
Madurai - 625 003.
Ph.No : 0452 - 2692680, Mob.No : 9786300304,
E-mail : sncfco@gmail.com

G+

### Branches

| | | | |
|---|---|---|---|
| Madurai Main 98430 93250 | Trichy 98432 91654 | Arasaradi/mdu 73391 25777 | Thirunagar/mdu 84899 10191 |
| Dindigal 98432 91652 | Coimbatore 82200 52338 | Erode 75581 99888 | Srivilliputhur 70944 61192 |
| Anna Nagar/mdu 98432 91653 | Reserveline/mdu 98430 93256 | Aruppukkottai 73589 91777 | Dindigul (Regl.) 75581 99777 |

# நமது இந்தியா

அ ரசியல் அமைப்பில் புது சட்டங்கள் செய்தோம்
ஆ ங்கிலேயர் ஆட்சி நீங்கப் பெற்றோம்
இ ன்னுயிர் பல இழக்கத் துணிந்தோம்
ஈ டில்லா தியாகங்கள் கடந்து வந்தோம்
உ ரிமை பெற்று உண்மை நிலைநாட்டினோம்
ஊ க்கத்துடன் தாக்கங்கள் கடந்து வந்தோம்
எ (ந்)ம் நாடு என்று எழுச்சி கொண்டோம்
ஏ ற்றமிகு ஏகபோக வாழ்வு கண்டோம்
ஐ யுறவு தெளிந்து சுதந்திரம் பெற்றோம்
ஒ ன்றாய்கூடி வாழும் ஒற்றுமை அறிந்தோம்
ஓ ங்குபுகழ் ஓட்டுரிமை பெற்று உவந்தோம்
ஔ வியம் நீக்கி அறநெறியில் உய்வோம்
அ ஃ தே நன்றென்று வீறு கொள்வோம்



அரு. சிவகாமி இராமனாதன்
ஒக்கூர், நவிமும்பை



பெண் கதவு! ஆண் பூட்டு! - 3

# அன்பு பிசாசு

- சேவு.முத்துக்குமார், காரைக்குடி



மனைவி : நான் உங்களுக்காக இந்த உலகத்தையே எதிர்த்து சண்டை போடுவேன்...


கணவன் : நீ எப்பொழுது பார்த்தாலும் என்னோடுதானே சண்டை போடுற..

மனைவி : நீங்கள் தானே என் உலகம்.

மணிகண்டன் மிகுந்த ஆவலாக அதிகாலையில் எழுந்து, தூங்கிக் கொண்டிருந்த தன் மனைவி ரமாவை எழுப்பினான்.

செல்லம்.. யோகா... பண்ணப்போறேன்.. நீயும் வர்றியா?

ஓ... அப்படின்னா.. நான் குண்டா இருக்கேன். உடம்பைக் குறைன்னு சொல்ல வர்றீங்க... அப்படித்தானே என்றாள் அவள்.



இல்லம்மா... யோகா பண்றது உடம்புக்கு நல்லது.

அப்போ.. என்னை நோயாளின்னு சொல்ல வர்றீங்களா.

ஐயோ .. அப்படியெல்லாம் இல்லடா, ஏன் எல்லாத்தையும் தப்பாகவே புரிஞ்சுக்கிற அப்படின்னா எனக்கு எதுவும் புரியாது, நான் இவ்வளவு நாளா புரிஞ்சுக்காமத் தான் உங்ககிட்ட இருந்தேன். அப்படித்தானே என அவள் சொல்ல.

இங்கபாரு, நான் அப்படியெல்லாம் சொல்லல,

அப்படித்தான் சொன்னீங்க அப்ப என்ன நான் பொய் சொல்றேனா?

தயவு செஞ்சு விடு, காலங்காத்தால ஏன் சண்டையை ஆரம்பிக்கிற

ஆமாங்க.. நான் சண்டைக்காரிதான். இப்படிச் சொல்லிச் சொல்லியே

ஊரெல்லாம் சண்டைக்காரின்னு எனக்குப் பேர் வாங்கிக் கொடுத்திட்டீங்க

சரி சரி. நான் போகல போதுமா?

உங்களுக்குப் போக அலுப்பு. அதுக்கு என்னை ஏன் குத்தம் சொல்றீங்க?

சரி சரி நீ தூங்கு, நான் தனியா போயிக்கிறேன். சந்தோஷமா....



அதானே உங்களுக்கு வேணும், எங்க போனாலும் தனியாப் போய்...சந்தோசமா இருக்கணும், அதுக்குத்தானே இவ்வளவு பேசுறீங்க

வெறுத்துப் போன மணி யோசித்தான், யோசித்தான், யோசித்தான், தான் என்னதவறு செய்தேன் என்று அவனுக்குப் புரியவே இல்லை, அப்படியே களைப்பாகிப் படுத்துவிட்டான்.

சிறிது நேரத்தில் அவனை எழுப்பி, ரமாகாபி கொடுக்க, வாங்கினான் அவன். அவள் ஏதும் நடக்காதவளாக,சமையலறை சென்றுஅன்றைய வேலைகளைத் துவங்கினாள்.

எழுந்து அமர்ந்த அவன் இருகை தூக்கி பரலோகத்தில் இருக்கும் என் பிதாவே,, இவளை எனக்கென்று நீ தந்திருக்கிறாய்.. ஆனால் இவள் என்ன செய்கிறோம் எனத் தெரியாமல் செய்கிறாள். ஆகவே இவளை மன்னியும் என இறைஞ்சினான். இதில் அவன் பெற்ற ஒரே மகிழ்ச்சி, எந்த இடத்திலும் , நீ, வா,போ என்று சொல்லாமல், அவனே இவனே என்று சொல்லாமல் அவள் பேசியதே.. அந்த வகையில் திருப்திஅடைந்தான், அவளோடு இணங்கி வாழ்வதே உத்தமம் என வாழும் அவனைப்போன்றோரையும்,சண்டையிட்டாலும், அதை மறந்து

கணவனைப்பேணும் அவளைப்போன்றோரையும் பெற்றுச் சிறப்பதே இல்லறம்.

பொல்லாத மனைவியோடு வாழ்ந்து விடலாம். ஆனால் புரியாத மனைவியோடு எவ்வாறு வாழ்வது, என்பது முன்னோர் வாக்கு... ஆனால் பொல்லாதவளாகவும், புரியாதவளாகவும் இவள் இருந்தாலும், என் மீது அன்புடையவளாக இருக்கிறாளே, அது ஒன்றே போதும்...நான் வாழ... ஐந்து விரலும் ஒன்றாக இருக்காதல்லவா என சமாதானப்படுத்திக் கொண்டு, காபியைக் குடிக்கத் துவங்கினான்.

அங்கு வந்த ரமா என்ன யோசிச்சுக்கிட்டே இருக்கீங்க.. குடிச்சுட்டு டம்ளரக் கொடுங்க என ஆரம்பிக்க, ஆந்தை மாதிரிவிழித்து டம்ளரைக் கொடுத்தான்.போயி பல்ல விளக்கிட்டு, குளிங்க.. எப்பப் பார்த்தாலும் பல்லு விளக்காமலேயே காபி குடிக்கிறது, ஏன்டி? நானாடி உன்கிட்ட காபி கேட்டேன் என்று கேட்டான் அவன்.

கேப்பீங்க கேப்பீங்க, உங்களுக்குக்காபி கொடுக்கத்தான் எங்கம்மா என்னைப் பெத்து அனுப்புச்சுருக்காளா? நான் என்ன சமையல்காரியா? அடுத்த கச்சேரி ஆரம்பமாகவே,,,அமைதியாக எழுந்து குளியலறை நோக்கி ஓடினான், தன் விதியை நொந்தபடியே...

என்ன செய்வது பேய்க்கு வாக்கப்பட்டா குடும்பம் நடத்தித் தானே ஆகணும்னு சொல்வாங்க. ஆனா இவ பேய் இல்ல, என் அன்புப் பிசாசு என்று சொல்லிக்கொண்டே,,அன்றைய நாளைத் துவங்கினான் அவன்..

நீங்க எப்படி சரிக்கு சரி சண்டைப்போட்டுக்கிட்டு இருக்கப் போறீங்களா... போங்கசார்,போயி அன்புப் பிசாசை அமைதிப் படுத்தப் பாருங்க...

நன்றி : ஓவியம். மோகன் மணிமாலா

EIGHT DEGREES
Studios

Professional Photograper




**EVENT . WEDDING . FAMILY . CORPORATE . AND MANY MORE**

9 5 5 1 1 5 5 8 8 8

உ
சிவமயம்

# மதுரை நகரத்தார் சங்கம்

25, வடக்கு சித்திரை வீதி, மதுரை 625 001, தொலைபேசி - 93859 53450

**மதுரை நகரத்தார் சங்கத்தில் 2023-2025 பருவத்திற்கான நிர்வாகிகள் பொறுப்பேற்று 05.02.2024 தேதி 100 நாள் நிறைவுற்றது. சங்கம் சார்பாக செயல்படுத்தப்பட்ட நிகழ்வுகள்**

- நகரத்தார் பெருமக்கள் எதவாக உள்ள 65 வயதுக்கு மேற்பட்ட நகரத்தார்களுக்கு மாதா மாதம் பென்சன் தொகையாக ரூ.500/- கொடுத்து வருகிறோம்.
- ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நம் மதுரை நகர விடுதியில் காலை 10 மணி முதல் 1 மணி வரை நகரத்தார் பெருமக்களுக்கான திருமண சேவை நடத்தி வருகிறோம்.
- ‘ ஒவ்வொரு மாதமும் 3வது ஞாயிற்றுக்கிழமை நகரத்தார் முதியோர் நலன் காக்கும் விழாவில் சொற்பொழிவுடன் மதிய விருந்தும் கொடுத்து வருகிறோம்.
- ‘ நம் சங்க பதிவு 2022-2023ம் ஆண்டிற்குரிய ரெஜிஸ்ட்ரேசன் ரெனிவல் செய்துள்ளோம்.
- நம் மதுரை நகர விடுதியில் 2வது மாடியில் 10 அறைகள் அட்டாச்டு பாத்ரும் உடன் கட்டுவதற்கு நன்கொடையாளர்கள் முன்வந்துள்ளார்கள். அதில் 60 பேர் அமரும் அளவிற்கு சிறிய ஹால் கட்டி தருவதற்கும் நன்கொடையாளர்கள் முன் வந்துள்ளார்கள். இரண்டாவது மாடிக்கு லிப்ட் ஏற்பாடு செய்து வருகிறோம். நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.
- ‘ திருப்பரங்குன்றம் மரகத விநாயகர் கோவில் கும்பாபிஷேகத்திற்கு ஏற்பாடு செய்து அதற்கு எதிர்வரும் 21.2.2024ம் தேதியன்று கோபுர பாலாலயம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது கோவில் ஸ்தபதி வேலை சுமார் ரூபாய் 5 லட்சத்திற்கு நன்கொடையாளர்கள் முன்வந்துள்ளார்கள்.
- கும்பாபிஷேக உணவு 5 வேளைக்கும் வழங்குவதற்கு நன்கொடையாளர்கள் முன்வந்துள்ளார்கள். மதிப்பு ரூ.3.50

இலட்சம். திரு.ராஜா பட்டர் கொடுத்துள்ள யாகசாலை செலவுகளுக்கு நன்கொடையாளர்கள் முன்வந்துள்ளார்கள். மதிப்பு ரூ.1லட்சம்.

- மரகதவிநாயகர் ஆலயத்தில் தரைதளம் போட மதிப்பு ரூ.2 இலட்சம். இதற்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். இதர கும்பாபிசேகம் மற்றும் பெயிண்டிங் உள்பட செலவு ரூ.3 இலட்சம் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கும் உபயதாரர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.
- ஆதார் புதுப்பிக்க மற்றும் மாற்றம் செய்ய புதிதாக எடுக்க நம் நகர விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்டு நல்ல வரவேற்பை பெற்றது
- ‘ நம் நகரத்தார் பிள்ளைகளுக்கு நம் மதுரை நகரத்தார் சங்கம் முழு முயற்சி எடுத்து சிங்கப்பூர் **R.Force** நிறுவனத்தின் சார்பில் நேர்காணல் நடத்தப்பட்டு நம் நகரத்தார் பிள்ளைகள் 3 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு அவர்களுக்குரிய பணி உத்தரவு மற்றும் விசா பிப்ரவரி மாதத்தில் கிடைத்து விடும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.
- ‘ மதுரை தெப்பக்குளம் காவல் நிலையம் இருக்குமிடத்தின் பின்புறம் நகரத்தார் லாக்கர் டிவிசன் கட்ட முழு முயற்சி எடுத்து வருகிறோம். காவல் நிலையத்தை காலி செய்யவும் உரிய ஏற்பாடுகள் செய்து வருகிறோம்.
- நம் சங்க உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்க குழு அமைக்கப்பட்டு பெயர் முகவரி சரி பார்க்கப்பட்டு வருகிறது.
- ‘2024 தினசரி காலண்டர் நகரத்தார் சங்க பெயர் அச்சிடப்பட்டு அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்பெற்றது.

அன்புடன்
இராம வயிரவன்
தலைவர்

A.சொக்கலிங்கம்
துணைத்தலைவர்

S.சோமசுந்தரம்
செயலாளர்

**05.02.2024**

A.வள்ளியப்பன்
இணைச்செயலாளர்

A.லெட்சுமணன்
பொருளாளர்

# வல்லமை தரும் வல்லாரை!

இன்றைய வேகமான உலகில், மன அழுத்தம் மற்றும் பதட்டம் ஆகியவை சாதாரணமாகி விட்ட நிலையில், நமது ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் பராமரிக்க இயற்கை வைத்தியத்தின் முக்கியத்துவத்தை அனைவரும் உணர்ந்திருப்போம். மருத்துவ மூலிகை பொருள்களில் ஒரு குறிப்பிடத்தக்க மூலிகை ஒன்று வல்லாரை. தற்போது பாரம்பரியத்துக்கு திரும்பியிருக்கும் அனைவருக்குமே வல்லாரை பற்றிய விழிப்புணர்வு இருக்கும்.



வல்லாரை (Centella asiatica) (Asiatic pennywort, Indian pennywort) ஒரு மருத்துவ மூலிகைப் பயன்பாடுடைய கீரை வகைத்தாவரமாகும். வல்லாரை தரையில் படர்ந்து பரவும் தன்மை கொண்டது. இதன் படரும் தண்டிலுள்ள கணுக்களிலிருந்து வேர்கள்

முளைக்கின்றன. இது ஈரப்பசை நிறைந்த இடங்களில், குறிப்பாக ஆறுகள், ஓடைகள் போன்ற நீர்ப்பாசனம் மிகுந்த வயல் வெளிகளிலும் காணப்படுகின்றன. இது நீர் நிறைந்த பகுதிகளில் தானாக வளரும் தன்மை கொண்டது. இதன் இலைகளை உணவாகப் பயன்படுத்துவதால் இத்தாவரம், கீரை இனங்களில் ஒன்றாக விளங்குகிறது.

வல்லாரையில் இலை பெரிதாக உள்ள இனம், இலை சிறிதாகவும் வேர் அதிகமாக உள்ள இனம் என இருவகை உண்டு. வேர் அதிகமாகவும், இலை சிறியதாகவும் உள்ள இனம் மருத்துவ குணம் அதிகம் கொண்டது. வல்லாரை இந்தியா, தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, தென் ஆப்ரிக்கா, மற்றும் வெப்ப மண்டலப் பகுதிகளில் அதிகம் வளர்கிறது.

### வல்லாரை கீரையில் உள்ள சத்துக்கள் :

வல்லமை மிக்க கீரை என்பதால் இது வல்லாரை எனப்பெயர் பெற்றது. வல்லாரை ஞாபக சக்தியை மேம்படுத்துவதால் இது சரஸ்வதி கீரை என்றும் அழைக்கபடுகிறது. வல்லாரையில் இரும்புச்சத்து, சுண்ணாம்புச்சத்து, வைட்டமின் A, C மற்றும் தாது உப்புக்கள் ஏராளமாக அடங்கியுள்ளன. இரத்தத்திற்கு தேவையான சத்துக்களை, இந்த கீரை சரியான அளவில் கொண்டுள்ளது. வல்லாரையின் இலைகள் உட்பட முழுத் தாவரமும் உணவாகவும், மருத்துவத்திலும் பயன்படுகிறது.



இக்கீரையை, சித்த மருத்துவர்கள் லேகியம், சூரணம், மாத்திரை போன்ற வடிவங்களில் பக்குவப்படுத்தி மருத்துவத்தில் பயன்படுத்துகிறார்கள். மனதுக்கும் உடலுக்கும் தேவையான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த வல்லாரை கீரை அறிவாற்றல் செயல்பாட்டை மேம்படுத்தவும், நினைவாற்றலை மேம்படுத்தவும். மன சோர்வை குறைக்கவும் இயற்கையான வழியை வழங்குகிறது.

மூளை நன்கு செயல்படத் தேவையான ஊட்டச்சத்துக்களை, தகுந்த முறையில் பெற்றிருக்கிறது. எனவே தான், இதனை சரஸ்வதி மூலிகை என்று அழைக்கின்றனர். மேலும் பிராம்மி, சண்டகி, பிண்டீரி, யோசனை வல்லி, என பல பெயர்களில் வல்லாரை அழைக்கபடுகிறது.

மேலும், வல்லாரை கீரையில் அழற்சி எதிர்ப்பு மற்றும் புற்றுநோய் எதிர்ப்பு பண்புகள் இருப்பதாக நம்பப்படுகிறது. வல்லாரை கீரையை நம் உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம். நமது உடல் மற்றும் மன உற்சாகத்தை அதிகரிக்கலாம்.

## வல்லாரை மருத்துவப் பயன்கள் :

### மனநோயை குணபடுத்தும்



அதிகாலை சூரிய உதயத்திற்கு முன்பு எழுந்து, மூன்று வல்லாரை இலைகளைப் பச்சையாக சாப்பிட்டு விட்டு, நான்கு மணி நேரம் எதுவும் சாப்பிடாமல் இருந்து, நன்கு பசியெடுத்தபின் அரை லிட்டர் பசும்பால் குடித்து வரவும். மேலும் அந்த சமயங்களில் உணவில் உப்பு, புளி அதிகம் சேர்த்து கொள்ளகூடாது. அப்படி சாப்பிட்டு வந்தால் மனநோய்கள் மறைந்து மனதில் மென்மை உணர்வு மேலோங்கும். இதனால் சகல மனநோய்களும் அகலும்.

ஞாபசக்தி உண்டாகும் நல்ல ஞாபசக்தி உண்டாக வல்லாரை இலையுடன் அரிசி, திப்பிலி சேர்த்து ஊறவைத்த மைபோல அரைத்து, காலை, மாலை நெல்லிக்காய் அளவு சாப்பிட்டு வந்தால் நல்ல ஞாபசக்தி உண்டாகும்.

### யானை கால் நோய் தீரும்

வல்லாரை இலையுடன் பால் கலந்து அரைத்து, விழுதை நெல்லிக்காய் அளவு தினமும் உண்டு வர நரை, திரை அகலும். இளமைத் தோற்றம் திரும்பும். இந்த இலையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் யானைக் கால் நோய் குணமாகும்.

### இதயநோய்களை தீர்க்கும்

வல்லாரை இலைகள் 3, அக்ரோட் பருப்பு 1, பாதாம் பருப்பு 1, ஏலக்காய் 1, மிளகு 3, கற்கண்டு 10 கிராம் ஆகியவற்றை ஒன்றாய் சேர்த்து விழுதாய் அரைத்து, அதைப் பாலில் கலந்து காலையும் மாலையும் தொடர்ந்து 21 நாட்கள் சாப்பிட்டு வந்தால் இதயநோய்கள் இருந்தால் மாயமாய் மறையும்.

### சீதபேதி குணமாகும்

குழந்தைகளுக்கு ஏற்படும் சீதபேதி குணமாக, 2 வல்லாரை இலையுடன் சிறிது சீரகம் சேர்த்து அரைத்துச் சர்க்கரைக் சேர்த்து கொடுக்கக் சீதபேதி குணமாகும்.

தோல் நோய்கள் குணமாகும் சிறிது வல்லாரை இலைகள், புழுங்கல் அரிசி வடித்தது கால் கிலோ, ஐந்து மிளகு சேர்த்து மாவு போல அரைத்து கொள்ளவும். பின்பு அதனுடன் தேவையான அளவு சின்ன வெங்காயம் நறுக்கிச் சேர்த்து, அந்த மாவில் ரொட்டி போல் சுட்டு சாப்பிட்டு வர, படை, நமைச்சல், தோல் நோய்கள் குஷ்டம் போன்ற தோல் நோய்கள் தீரும்.

### வயிற்று பூச்சிகள் அழியும்

அரை லிட்டர் வல்லாரை இலைச்சாற்றில் கால் கிலோ வாய்விளங்கத்தை ஊறவைத்து, அதை வெயிலில் உலர்த்தி

கொள்ளவும். உலர்ந்ததும் தூள் செய்து காலை, மாலை வேளைகளில் ஒரு கிராம் அளவு சாப்பிட்டு வந்தால் வலிப்பு நோய் குணமாகும். மேலும் வயிற்றுப் பூச்சிகள், கிருமிக் கோளாறுகள் மறையும்.

### மலச்சிக்கல் மற்றும் குடல் புண்களை ஆற்றும்

10 கிராம் வல்லாரைப் பொடியோடு, 5 கிராம் அதிமதுரத் தூள் கலந்து இரவில் தூங்கப் போகும் முன் வெந்நீரில் கலந்து குடிக்க மலச்சிக்கல் தீரும். மேலும் வல்லாரைக் கீரையை வாயில் போட்டு மென்று விழுங்கினால் குடல் புண், வாய்ப்புண், வாய் நாற்றம் போன்றவை குணமாகும்.

### இரைப்பு நோய் குணமாகும்

வல்லாரை இலைச்சாற்றில் அரிசித் திப்பிலியை ஊறவைத்து உலர்த்தித் தூள் போல செய்து வைத்துக் கொள்ளவும். இந்த தூளை சிறிதளவு தேனில் குழைத்து தினமும் இருவேளை சாப்பிட்டு வந்தால், நாள்பட்ட கபநோய்கள், இரைப்பு, இருமல் போன்றவை குணமாகும்.

உடலுக்கு வலுவை தரும். வல்லாரைத் தூள் 100 கிராம், அமுக்கரா கிழங்குத்தூள் 100 கிராம் அளவு எடுத்து இரண்டையும் ஒன்றாகக் கலந்து வைத்துக்கொள்ளவும். இந்த கலவையை தினமும் காலை மற்றும் மாலை வேளைகளில் இரண்டு கிராம் அளவு தொடர்ந்து 48 நாட்கள் சாப்பிட்டு வந்தால் உடல் வலிமை, ஆரோக்கியம் உண்டாகும். இளைத்த உடல் பருக்கும்.

### ரத்த சோகை குணமாகும்

சிறிது கைப்பிடி அளவு வல்லாரை இலைகளையும், அதே அளவு மணத்தக்காளி கீரையையும் எடுத்து அரைத்து சாறு எடுத்து காலை, மாலை ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வந்தால் இரண்டு வாரத்தில் ரத்த சோகை நோய் முற்றிலும் குணமாகும்.

### வல்லாரை கீரையை சாப்பிடும் முறை



1. வல்லாரையை காலை நேரத்தில், பறித்த சில மணி நேரங்களில், பச்சையாக நன்கு மென்று சாப்பிட்டு வந்தால், மூளை மிகுந்த சுறுசுறுப்படையும்.
2. காலை வேளையில், பறித்த சில மணி நேரங்களில், ஒரு கைப்பிடியளவு வல்லாரை கீரையைப் பச்சையாக நன்கு மென்று சாப்பிட்ட பின், பசும்பாலை குடித்து வந்தால், மாலைக்கண் நோய் குணமாகும்.
3. காலை நேரத்தில் வல்லாரையை மிளகுடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் உடற்சூடு தணியும்.
4. வல்லாரை சாப்பிடும் காலங்களில் மாமிச உணவுகள், அகத்திக் கீரை, பாகற்காய் ஆகியவற்றை சாப்பிடக்கூடாது. மேலும் புளி மற்றும் காரம் அதிகமாக சேர்த்து கொள்ள கூடாது. அப்போதுதான் அதன் முழுமையான சத்துக்கள் உடலுக்கு கிடைக்கும்.
5. இந்த கீரையை பச்சையாக உண்ணுதல் மிகவும் நல்லது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரைஅனைவரும் சாப்பிடலாம்.
6. கர்ப்பிணி பெண்கள், வலிப்பு நோய் உள்ளவர்கள் இம்மூலிகையை பயன்படுத்தக்கூடாது.

வல்லாரை கிடைப்பதற்கரிய பொருள் அல்ல. எளிதாக கிடைக்க கூடியதுதுதான். இப்போது கீரை விற்பவர்களிடமே வல்லாரை எளிதாக கிடைக்கிறது. வீட்டிலும் நீர் நிறைந்த தோட்டப்பகுதியாக இருந்தால் வல்லாரையை வளர்க்கலாம். பலவிதமான மருத்துவகுணங்களை கொண்டிருக்கும் இதனை வல்லமை தரும் கீரை என்று சொல்லலாம் . கட்டுரையை படிப்பதோடு மட்டுமல்லாமல் மருத்துவப்பயனுள்ள இந்தக் கீரையைப் பயன்படுத்தி பயன் பெருவோமாக .

# சமூகமாவது சுற்றமும் நட்பும்





வாழ்ந்திடும் உலகம் குறுகிய வட்டம்
அதற்குள் நிகழ்ந்திடும் நித்தம் யுத்தம்
சுற்றமும் நட்பும் கரங்களைக் கோர்க்கும்

பிடித்தே நடந்துத் திசைகள் கடக்கும்
புரிந்து இருந்திட வையகம் சுவைக்கும்
மனதுக்குள் இன்பம் என்றும் பிறக்கும்

ரெளத்திரம் தவிர்த்திட உறவுகள் நிலைக்கும்
அதுவே நாளும் நிம்மதி அளிக்கும்
சமூகம் இதுவென உணர்ந்திட விளங்கும்

இரவினில் நித்திரை இனிதாய் அமையும்
அணைத்துச் சென்றிடப் பூக்கள் மலரும்
உள்ளத்தில் களிப்பு அழகுடன் மிளிரும்



கவிச்சுடர் தஞ்சை
பழ வள்ளியப்பன்
மதுரை

ஏட்டில் இல்லாத மகாபாரதக் கதைகள் - 22

# கண்ணனை தாக்கிய அம்பு

- புலவர் த. கோவேந்தன், டி. லிட்

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு .. என்றார் திருவள்ளுவர்



இது கண்ணன் கூறிய துல்ய ப்ரிய அப்ரியோ தீர (இனியவரிடத்தம் இன்னாதாரிடத்தும் சமானமாக நடக்கும் தீரன்) என்ற குரலின் எதிரொலியே எனலாம்

இன்னா செய்தார்க்கும் இனிய செய்க என்று சொல்வது யார்க்கும் எளிய ஆனால் சொல்லியவண்ணம் செயதல அரியதெனபது தமிழ்மறை கண்ண பெருமான் முழுஞானி அவனிடம் சொல்லுககும் செயலுக்கும் வேறுபாடு காண இயலுமா! . இக்கருத்துக்கு எடுத்துக் காட்டாகக் கண்ண பெருமானின் இறுதி வரலாறு திகழ்கின்றது



தன் அவதாரச் செயல்கள் முழுவதும் முடிந்தபின்பு, அடுத்து என்ன செய்யலாம் என்று சிந்தனையில் ஆழ்ந்தான் கண்ணன் ஓர் அரச மரத்தின் நிழலில்,



ஒரு காலை மேலே மடித்து வைத்துக் கொண்டு தனிமையில் அறிதுயில கொண்டிருந்தான்.அவன் திருவடியின் உள்ளங்கால் செவ்வண்ணம் கண்ட ஒரு வேடன், ஏதோ ஒரு மிருகம் அமர்ந்திருப்பாக எண்ணி விட்டான் அன்று அவன் வேட்டைக்குப் புறப்பட்டதிலிருந்து எந்தப் பிராணியும் தென்படவில்லை எதிர்பாராமல் தென்பட்ட இந்தப் பிராணியை விட்டுவிடலாகாது என்று கருதினான் உடனே கண்ணபிரானது திருவடித்தலத்தில தன் அம்பைக் குறி வைத்து எய்துவிட்டான்


அந்த அம்பு, தவறாமல் கண்ணனது உள்ளங்காலில் தைத்தது இரத்தம் பீறிட்டது தான் எய்தது விலங்கை அல்ல, கண்ணபிரானையே என உணர்ந்த வேடன் நடுங்கினான்.

ஐயோ! எத்தகைய பாவம் செய்துவிட்டேன் உலகம் காக்க அவதாரம் செய்த அச்சுதனைஅல்லவா எய்துவிட்டேன் இனி நான் உயிரோடிருத்தல் தகாது என்று தன் அம்பாலேயே தன் வயிற்றைக் கீறிக் கொள்ள முனைந்தான்.

இறைவன், நில்லு வேடப்ப! நில்லு வேடப்ப! என்று அபயம் கொடுத்து, அருகில் அழைத்து, நீ தெரிந்து இத்தவறு செய்யவில்லை அதுமட்டுமல்ல எனக்கு நன்மையேசெய்துள்ளாய் என் அவதார நோக்கம் நிறைவேறிவிட்டது அடுத்து என்ன செய்யலாம் என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன்

அடுத்துத் தன்னுடைய சோதிக்கு எழுந்தருளுவதே பரமபதம் மீளுவதே செய்யவேண்டுவது என்பதனை நீ உன் செயலால் உணர்த்தி விட்டாய்! நீ பாபம் என்றுஎண்ணுவது, எனக்கு லாபமாக முடிந்தது என்று ஆறுதல் கூறினான்.

பின்னர், அந்தரத்திலிருந்து வந்த தெய்வ விமானத்தில் அவ்வேடனை தூலஉடலுடனே ஏற்றிப் பரமபதத்துக்கு அனுப்பினான்.



## இன்பமும்..துன்பமும்..

நீங்கள் இன்பமாக இருக்கும் போது, இதற்கு முன் துன்பமாக இருந்தீர்கள் என்பதை மறந்து விடுகிறீர்கள்.

மீண்டும் துன்பம் தொடரும் என்பதையும் மறந்து விடுகிறீர்கள்.

நீங்கள் துன்பமாக இருக்கும் போது முன்பு இன்பமாக இருந்ததை நினைக்க மறந்து விடுகிறீர்கள்.

இனி இன்பம் தொடரும் என்பதையும் மறந்து விடுகிறீர்கள்.

இன்பம் வரும் போது அதில் மறைந்துள்ள துன்பத்தைத் தேடுங்கள்.

துன்பம் வரும் போது அதில் எங்கோ மறைந்திருக்கும் இன்பத்தைத் தேடுங்கள்.

பிறகு உங்களுக்கு உண்மை நிலை புரியும். இன்பமும் துன்பமும் வெவ்வேறு விசயங்கள் அல்ல.

அவை ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள்.

வெளியே தெரியும் விசயத்தின் மீது அதிக நம்பிக்கை வைத்து விடாதீர்கள்.

# "நகரத்தார் திருமணம்"

(நகரத்தார் திருமண நடைமுறைகள் பற்றிய சிறப்புத் தொடர்)

- கட்டுரைத் தொகுப்பு: அண.சீனிவாசன், காரைக்குடி



பகுதி - 7







## மணவறைச் சடங்கு :

புரோகிதர் இச்சடங்கை நடத்தி வைப்பார். விநாயகர் பூசை, வர்ணகும்ப பூசை, அக்கினி வளர்த்து நவக்கிரக ஓமம், ஆயுள் ஓமம், தீவலம் வருதல், அரிமணம் இடுதல், பூமணம் இடுதல் ஆகியவை நிகழும். இத்தகைய நிகழ்ச்சிகள் எல்லாம் மாமக்காரர்கள் முதலில் செய்த பிறகே மற்றவர்கள் செய்ய வேண்டும். பிறகு மணமகளின் உடன் பிறந்தவரில் ஒருவர் மணமகனுக்கும், மணமகனின் உடன் பிறந்தவர்களில் ஒருவர் மணமகளுக்கும் திரட்டுப்பால் தடவுவார்கள். வாழ்க்கை வளமுடன் இனிமை பொருந்தியதாக அமையட்டும் என்பதற்கு அறிகுறியாக திரட்டுப்பாலுக்குப் பதிலாக வாழைப்பழத்தை தின்பதற்குக் கொடுக்கின்ற நிகழ்ச்சிதான் இது.

காலப்போக்கில் வாழைப்பழத்தை மணமக்களின் வாயில் தடவி, வேடிக்கையாகச் சிரித்து மகிழ்கின்ற நிகழ்ச்சியாக மாறி யிருக்கிறது.

பிறகு மாப்பிள்ளை தலையில் எண்ணெய் சீயக்காய், தண்ணீர் முதலிய வற்றைப் பெண்ணும், பெண்ணின் தலையில் மாப்பிள்ளையும் மாவிலையால் தொட்டு வைப்பார்கள்.

அதன் பிறகு மாப்பிள்ளையின் எதிரில், ஒரு முக்காலி வைத்து அதன் மீது ஒரு சட்டியை வைத்து அதில் சோறு, பருப்பு, நெய், வாழைப்பழம் முதலிய வற்றைப் பரிமாறிய பின் மாப்பிள்ளை அதைச் சுவைத்துப் பார்க்க வேண்டும். பிறகு மாப்பிள்ளை கை அலம்புவதற்கு பெண் நீர் ஊற்ற வேண்டும்.

பிறகு மாமக்காரர்கள் இருவரும் மணமக்கள் தலைகளில் கொண்டை மாலைகளை மூன்று முறை மாற்றி மாற்றி வைப்பார்கள். பின்னர் பெண்ணின் தந்தை தலைச் சீலையில் பணம் முடிதல் வேண்டும். மணமக்கள் முன் இருக்கின்ற முக்காலி மீது உள்ள சட்டியில் அரிசி, மஞ்சள், தேங்காய் இவைகளை வைத்து ஒரு பட்டுத்துணியால் (மாமப்பட்டு) இரு மாமக்காரர்களும் மூடினாற்போலப் பிடித்திருக்க, மணமக்கள் இருவரும் அதை எடுத்து மூன்று முறை மாற்றிக் கொள்ள வேண்டும்.

பட்டுத் துண்டு போர்த்திய நிலையிலேயே மணமக்கள் இருவரும் எழுந்து அரசாணைக்காலையும் அக்னியையும் சுற்றி வலம் வந்து, நடு வீட்டில் சென்று அமர வேண்டும். மாமக்காரர் அந்தப் பட்டுத் துணியை விலக்கிய பிறகு அந்தப் பொருள்களை அங்கு வைத்துவிட்டு எழுந்து வெளியே வரவேண்டும்.







## தலைச்சீலையில் முடிதல் :

மணமகளின் தந்தை தன் மகளை மணமகன் வீட்டிற்கு அழைத்துச் செல்லும்போது வழிச் செலவுகளுக்கு கொடுக்கின்ற முதல் பணப் பரிசுதான் 'தலைச்சீலையில் முடிதல்' என்பதாகும். மணமகளின் தந்தை ஒரு சிறு தொகையை மணமகனின் தலையில் வைப்பார். அதனை எடுத்து மாமக்காரர் மணமகன் தந்தையிடம் கொடுத்துவிடுவார். பின்னர் இந்தத் தொகை மணமகளுக்கு கொடுக்கின்ற ஸ்ரீதனப் பணத்துடன் சேர்த்துக் கொள்ளப்படும்.

## வேவு எடுத்தல் :



தலைப்பிள்ளைக்கு மட்டும் முதலில் மாம வேவு எடுத்தல் வேண்டும். அதற்கு பெண் வீட்டார் தயாரித்துள்ள பச்சரிசி, இலைக்கட்டு, பரங்கிக்காய், வாழைப்பழம், கற்கண்டு, மஞ்சள், பழங்கள் முதலியவற்றைப் பணியாட்கள் தலைமேல் வைத்து பெண்ணுக்கு ஆயாள் வீட்டுப் பங்காளிகள் எல்லோரும் மேள தாளத்துடன் கொண்டு வருவார்கள். பெண் வீட்டு முகப்புப் பத்தியில் கோலத்திற்கு முன்பாக அவர்களை நிற்கச் செய்து, பெண்ணின் அப்பத்தாள் குத்து விளக்கு வைத்து பின் தாய் மாமன் வீட்டு ஆண்கள் தலையில் புழுங்கலரிசி படி 2, தேங்காய் 2, கத்திரிக்காய் 2 கொண்ட வேவுக்கடகத்தைத் தலையில் வைத்துக் கொள்ள, முதலில் பெண்ணும், பிறகு அவள் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் ஒவ்வொருவராக வந்து 5, 7, 9 என்ற ஒற்றைப் படை எண்ணிக்கையில் இறக்கி நடு வீட்டில் கொண்டு போய் வைத்து விடவேண்டும்.


மாப்பிள்ளை தலைப் பிள்ளையாக இருந்தால் மாப்பிள்ளையின் ஆயாள் வீட்டாரும் இந்த வேவு எடுத்தல் வேண்டும். ஆயாள் வீட்டு ஆண்கள் தலையிலிருந்து மாப்பிள்ளை வீட்டுப் பெண்கள் இறக்கவேண்டும்.



பிறகு பெண் வீட்டார் 'கல்யாண வேவு' எடுத்தல் வேண்டும். கல்யாண வேவின் போது பெண் வீட்டு ஆண்களான பெண்ணின் தந்தை, பெண்ணின் பெரியப்பா, சித்தப்பா, பெண்ணின் அண்ணன், தம்பிகள், பெண்ணின் அண்ணன் தம்பி மகன்கள், பெண்ணின் அய்யாக்கள், வீட்டுப் பங்காளிகள், கூடிக்கிற பங்காளிகள், பெரும் பங்காளிகள் ஆகியோர் தலையில் வேவு கடகத்தை வைத்துக் கொள்ள மாப்பிள்ளை வீட்டுப் பெண்களான கல்யாணப் பெண், மாப்பிள்ளையின் தாயார், மாப்பிள்ளையின் ஆச்சி, தங்கைமார், மாப்பிள்ளையின் ஆச்சி தங்கச்சி மக்கள், மாப்பிள்ளையின் பெரியப்பச்சி, சித்தப்பார் மகள்கள் இறக்கி இருவருமாக நடு வீட்டிற்குள் கொண்டு போய் வைத்தல் வேண்டும்.

– தொடரும்...

படங்கள் : உ. சிறுவயல் AL.திருநாவுக்கரசு



நகரத்தார்கள் பயன் பெறும் வகையில் நகரத்தார் சமூக திருமண நடைமுறைகள் பற்றி வெளிவந்த சிறப்பு வெளியீடான நகரத்தார் திருமண நடைமுறை கையேடு புத்தகம் விலைக்கு வேண்டுவோர் கட்டுரை தொகுப்பாளர் திரு.அண .சீனிவாசன் அவர்களை 94443 44022 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.


# இணையில்லா கண்ணதாசன்

சிறுகூடல்பட்டி பெற்றெடுத்த புகழ்மேவிய பெருமகன்
காரைக்குடி தத்தெடுத்த செழித்தோங்கிய தமிழ்மகன்
ஆன்றோரும் சான்றோரும் போற்றுகின்ற கவிமகன்
திரையுலகில் வான்முகிலாய் வளம் வந்த கலைமகன்

பைந்தமிழின் புதல்வராய் முத்தமிழின் முதல்வராய்
திறந்த புத்தகமாய் நிறைந்த பெட்டகமாய்
கலங்காதிரு மனமே எனத் தொடங்கிய வாழ்க்கை
கண்ணே கலைமானே என நிறைவுற்ற வாழ்க்கை

உனக்கு விருது கொடுத்திருந்தால் விருதுகள் மதிப்புக் குறைவதில்லை
நீ பெறாத விருதுகளை எவர் பெற்றாலும் நிறைவதில்லை
கற்றால் வராத சிந்தனையை எளிதாய் கற்றோம் உன் எழுத்தில்
கற்றும் தராத தத்துவங்கள் கற்றுக் கொண்டோம் உன் இடத்தில்


இலக்கியத்தில் படித்ததையெல்லாம் பாட்டிலே பொருளாய் வைத்தாய்
இறந்த பின்னும் பாட்டாய் இயங்கி உன் இறப்பையே பொய்க்கச் செய்தாய்
இறவாப் புகழ் பெற்ற கவியரசே என் சிந்தையில் இறங்கு
இங்கே இருந்து என் வழியே நற்றமிழென முழங்கு



கவிஞர் எம்.சோலை,
காரைக்குடி.

# மழலை மழைத்துளிகள்...!!!

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும் அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை இந்த மழலை மழைத்துளிகள்



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas, USA

## வாரம் ஏழு நாட்கள்

ஞாயிறென்றும் திங்களென்றும்
... நாட்கள் தொடங்கிடும்
செவ்வாயொடு புதன்கிழமை
... சேர்ந்து தொடர்ந்திடும்
வியாழனோடு வெள்ளியோடும்
... விரைந்து வளர்ந்திடும்
சனியுடனே வாரமொன்று
... பூர்த்தி ஆகிடும்




## மரம் கொடி செடி



கொய்யா காய்க்குது மரத்தினிலே
... கொரித்திட அணிலும் விரைந்ததுவே
கொவ்வை காய்க்குது கொடியினிலே
... கொள்ளை அழகாய்ச் சிவந்ததுவே
கையால் தாவிப் பறித்திடவே
... காய்க்குது வெண்டை செடியினிலே
கலந்தே மரம்கொடி செடிகளென
... கொண்டது எங்கள் தோட்டமிங்கே!



# வாழ்வை வளமாக்கும் மகா சிவராத்திரி...!

– இராம.சொக்கலிங்கம் , நற்சாந்துபட்டி

சிவம் என்ற சொல்லுக்கு ' சுகம்' என்ற பொருள் உண்டு. சிவராத்திரி என்பதற்கு மங்களகரமான இரவு, இன்பம் தரும் இரவு என்பது பொருள். இந்த உலகம் முழுவதும் மஹா பிரளய வெள்ளத்தில் சிவபெருமானிடம் ஒடுங்கிய நாளே 'மகா சிவராத்திரி ' என்று சைவ சமயம் கூறுகின்றது.

அம்பிகைக்கு நவராத்திரி... ஆலகாலவிஷம் உண்ட ஈசனுக்கு ஒரே ராத்திரி... சிவராத்திரி என்பார்கள். மாதந்தோறும் சிவராத்திரி வரும். இது ரொம்பவே விசேஷம். மாசி மாதத்தில், தேய்பிறை சதுர்த்தசி நாளில் வருகிற சிவராத்திரி மகா சிவராத்திரி என்று போற்றப்படுகிறது.



## சிவராத்திரி ஐந்து வகைப்படும்.

**நித்திய சிவராத்திரி :** ஒவ்வொரு சதுர்த்தியிலும் சிவபூஜை செய்து, ஒரு வருடத்தில் இருபத்திநான்கு சிவராத்திரி பூஜை புரிவது நித்திய சிவராத்திரி.

**பட்ச சிவராத்திரி :** தை மாதம் கிருஷ்ண பிரதமை முதல் பதின்மூன்று நாட்கள் தினமும் ஒருவேளை உணவு உட்கொண்டு, சதுர்த்தியில் பூஜை செய்வது பட்ச சிவராத்திரி.

**மாத சிவராத்திரி :** தை மாதத்தில் சுக்ல திருதியை, மாசி மாதத்தில் கிருஷ்ண சதுர்த்தசி, பங்குனி மாதத்தில், முதலில் வரும் திருதியை, சித்திரையில் கிருஷ்ண அஷ்டமி, வைகாசி மாதம் முதல் அஷ்டமி, ஆனி சுக்ல சதுர்த்தி, ஆடி கிருஷ்ண பட்சமி, ஆவணி சுக்ல அஷ்டமி, புரட்டாசி முதல் திரயோதசி, ஐப்பசி சுக்ல துவாதசி, கார்த்திகை முதல் சப்தமியும் அஷ்டமியும், மார்கழி இருபட்ச சதுர்த்திகள் ஆகிய இவை அனைத்தும் மாத சிவராத்திரிகள்.

**யோக சிவராத்திரி :** சோம வாரத்தன்று அறுபது நாழிகையும் அமாவாசை இருந்தால் அது யோக சிவராத்திரி.

**மகா சிவராத்திரி :** மாசி மாதம் கிருஷ்ணபட்சம் சதுர்த்தசி இரவு மகா சிவராத்திரி புண்ணியகாலமாகும்.

அன்றைய தினம் இரவு கடைசி பதினான்கு நாழிகை ( ஐந்து மணி முப்பத்தாறு நிமிடங்கள் ) லிங்கோத்பவ காலம் எனப்படும். மாசி மாதத்தில் அமாவாசையில் இருந்து 14வது

சதுர்த்தசியன்று வருவது மகா சிவ ராத்திரியாகும்.

இந்த நாளின் சிறப்புகள் குறித்து கருட புராணம், கந்த புராணம், பத்ம புராணம், அக்னி புராணம் உள்ளிட்ட பல்வேறு நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மகா சிவ ராத்திரி நாளில் விரதம் இருப்போருக்கு கிடைக்கும் மகத்துவங்கள் என்ன என்பது பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிவராத்திரியின் மகிமை :



மாசிமாதம் தேய்பிறைச் சதுர்த்தசி திதியில் அம்பிகை சிவபெருமானை வணங்கியதாலேயே இந்த நாளில் மகா சிவராத்திரி கொண்டாடப்படுகிறது. பிரளய காலத்தின் போது பிரம்மனும், அவரால் சிருஷ்டிக்கப்பட்ட அனைத்து ஜீவராசிகளும் அழிந்து விட்டநிலையில், இரவுப் பொழுதில் அம்பிகை உமாதேவி, பரமேஸ்வரனை நினைத்து பூஜை செய்தாள். நான்கு ஜாமங்களிலும் இரவு முழுவதும் ஆகம விதிப்படி அர்ச்சனை செய்தாள்.

பூஜையின் முடிவில் அம்பிகை ஈஸ்வரனை வணங்கி, அடியேன் தங்களைப் பூசித்த இந்த இரவை, தேவர்களும் மனிதர்களும் தங்கள் திருநாமத்தாலேயே – அதாவது ஸ்சிவராத்திரி' என்றே கொண்டாட வேண்டும் என்று வேண்டினாள். சிவராத்திரி அன்று, சூரியன் மறைந்தது முதல் – மறுநாள் காலை சூரியன் உதயமாகும் வரை; தங்களை (சிவனை)ப் பூஜை செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு எல்லாவிதமான பாக்கியங்களையும் தந்து முடிவில் மோட்சத்தையும் அளிக்க வேண்டும். அருள் புரியுங்கள் என்று அன்னையானவள் வேண்டிக் கொண்டாள்..



சிவபெருமானும், அப்படியே ஆகட்டும் என்று கூறி அருள் புரிந்தார். அந்த இரவே ஃசிவராத்திரி' என வழங்கப்பட்டு, அனைவராலும் கொண்டாடப்படுகிறது. பகல் பொழுது பரமேஸ்வரனுக்கும், இரவுப் பொழுது அம்பிகையான உமாதேவிக்கும் உரியது என்பது நியமம். ஆனால் சிவராத்திரிஎன்பது அம்பாளின் வேண்டுதலின் படி கொண்டாடப்படுவதால் அது சிவனுக்கு உரியதாயிற்று.

## சிவராத்திரி வழிபாடு :

சிவனாருக்கு உகந்தது வில்வம். சிவபெருமானுக்கு உரிய மகா சிவராத்திரி நாளில், வில்வம் சார்த்தி சிவலிங்கத் திருமேனியைத் தரிசிப்பதும் அன்றைய சிவபூஜையில் கலந்துகொள்வதும் கண் விழிப்பதும் இந்தப் பிறவிக்கடமையை நிறைவேற்றுவதாக அமையும். கர்மவினைகளையெல்லாம் களையச் செய்து அருளுவார் மகேஸ்வரன் என்று போற்றுகிறார்கள் சிவனடியார்கள்.

மகா சிவராத்திரி நன்னாளில், இரவில் ஒவ்வொரு கால பூஜையாக விமரிசையாக நடைபெறும். மகா சிவராத்திரி நாளில், இரவில் கண்விழித்து, ஆலயத்தில் நடைபெறும் பூஜையைக் கண்ணாரத் தரிசித்துப் பிரார்த்தனை செய்வது நூறு மடங்கு பலன்களைத் தந்தருளும் என்பது ஐதீகம்.

பூஜை செய்ய முடியாதவர்கள் நான்கு ஜாமத்திலும் சிவபுராணம் கேட்டும், சிவத்துதிகளைச் சொல்லியும், சிவன் கோயிலுக்குச் சென்று அவ்விரவைக் கழித்தும் சிவனை வழிபடலாம்.


சிவராத்திரிக்கு மறுநாள் சிவபுராணம் படித்தோ அல்லது கேட்டோ, பகல் பொழுதைக் கழிக்க வேண்டும். பிறகு மாலை நெருங்கியதும் மாலை அனுஷ்டானங்களை முடித்து, அன்றிரவும் எதுவும் உண்ணாமல் இருந்து உறங்க வேண்டும்.

சிவ ராத்திரி தினத்தன்று முழு உபவாசத்தைக் கடைபிடித்தால் எம்பெருமான் வாழ்நாள் முழுவதும் காப்பாற்றுவதுடன் மகிழ்ச்சியையும், வாழ்வில் முன்னேற்றத்தையும் அளிப்பார் என்பது ஐதீகம்.

தவிர மகா சிவராத்திரி விரதம் இருப்போருக்கு நற்கதி கிடைப்பதுடன் இப்பூத உடல் மடிந்த பின் சொர்க்கத்தையும் இறைவன் அளிப்பான் என்பதே பின்னணித் தத்துவம்.

இப்படி இருபத்து நான்கு வருடங்கள் சிவராத்திரி விரதமிருந்தால் அவர்கள் சிவகதி அடைவார்கள். அத்துடன் அவர்களின் மூவேழு தலை முறைகளும் நற்கதி அடைந்து, முக்தியை அடைவது சத்தியம் என்கிறது புராணங்கள்.

மகா சிவராத்திரி நாளில், ருத்ரம் பாராயணம் செய்வோம். நமசிவாயம் சொல்வோம். அன்றைய நாளில், இரவில் நடைபெறும் ஒவ்வொரு கால பூஜையைத் தரிசித்துப் பிரார்த்தனைகள் செய்வோம். பிறவிப்பயன் அனைத்தையும் தந்து அருளுவார் தென்னாடுடைய சிவனார்.



# சிறுவாபுரி நகரவிடுதி மாதந்திர கிருத்திகை வழிபாடு



நமது சிறுவாபுரி நகர விடுதியில் கார்த்திகை மாத கிருத்திகை 24/12/2023 ஞாயிறுக்கிழமை அன்று நடைபெற்றது. அன்றைய தினம் காலை 7 மணிக்கு வேலுக்கு அபிஷேகமும் மதியம் 12 மணிக்கு மஹா தீபாராதனையும் நடைபெற்றது.

பக்தர்கள் திரளாக கலந்த இந்த நிகழ்வில் காலை மற்றும் மதியம் அன்னதானம் உபயதாரர்கள் பனையப்பட்டி திரு.ராமநாதன் செட்டியார்– சிந்தாமணி ஆச்சி குடும்பத்தினர் ,வேந்தன்பட்டி திரு.M.ராமுரத்தினம் செட்டியார் குடும்பத்தினர் மற்றும் தேவகோட்டை திரு.தி.நாகப்பன் செட்டியார் –அலமேலு ஆச்சி குடும்பத்தினர்சார்பில் நடைபெற்றது.

வழிபாடு ஏற்பாடுகளை நகரத்தார் சிறுவாபுரி பாதயாத்திரை டிரஸ்ட் குழுவினர் செய்திருந்தனர்.

நகரத்தார் பெருமக்கள் சிறுவாபுரி மாத கிருத்திகை வழிபாட்டு அன்னதான நிகழ்வில் பங்கு கொள்ள

பின்வரும் நகரத்தார் சிறுவாபுரி பாதயாத்திரை டிரஸ்ட் அமைப்பின் அங்கத்தினர்களை தொடர்பு கொள்ளலாம் .

திரு.SP சிதம்பரம் புரவலர் (9444274720)
திரு.K.சிதம்பரம் தலைவர் (9080264411)
திரு.PR.மீனாட்சிசுந்தரம் செயலாளர் (9444183688)
திரு.முத்தையா சம்பத் பொருளாளர் (9710066980)

# பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...

க .ஹர்ஷவர்த்தினிஸ்ரீ (நெற்குப்பை)
நகரத்தார்கேப்பிட்டல் சென்னை

இந்த இதழில் ஒரு நிறுவனத்தைபற்றிய விரிவான பகுத்தாய்வு.

AGARWAL
INDUSTRIAL CORPORATION LIMITED
*We value relationships*

## AGARWAL INDUSTRIAL CORPORATION LIMITED (AICL).,

### இந்நிறுவனத்தைப் பற்றி:

இந்நிறுவனம் பிட்யூமன் மீது கவனம் செலுத்தும் ஒரு ஒருங்கிணைந்த பெட்ரோ கெமிக்கல் நிறுவனமாகும். பிட்யூமனில் இந்நிறுவனத்தின் சந்தை முன்னணி நிலை, விநியோகச் சங்கிலி முழுவதிலும் சொந்த தளவாடச் சொத்துக்கள் மற்றும் உள்கட்டமைப்பு களுடன் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் ஒருங்கிணைந்த அணுகுமுறை யைப் பின் மாற்றுவதன் மூலம் விரிவான அளவிலான கட்டுமானத் தீர்வுகள் மற்றும் சேவைகளை வழங்கி வருகிறது. தங்கள் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதற்கும் பயனுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி வருகிறது. இந்நிறுவனத்தின் ஒருங்கிணைந்த அணுகு முறையானது தொழில்நுட்பம் மற்றும் மனித வளத்தை திறமையாகப் பயன்படுத்துவதன் மூலம் பரந்த அளவில் தயாரிப்புகளை சரியான

நேரத்தில் மற்றும் முழுமையான இணக்கத்துடன் வழங்க உதவுகிறது.

### இந்நிறுவனத்தின் தயாரிப்புகள்:

பிட்யூமன் இந்நிறுவன வணிகத்தின் முக்கிய மையமாகும். இந்நிறுவனத்தின் பரந்த அளவிலான புதுமையான பிற்றுமின் தயாரிப்புகள், சாலை, கூரை மற்றும் இன்சுலேடிங் பொருட்களின் சவால்களை எதிர்கொள்ள உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் பிட்மினஸ் தயாரிப்பு வரம்பில் பிசுபிசுப்பு தர நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர் ஹர்ஷவர்த்தினி ஸ்ரீ (நெற்குப்பை) எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும், ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட பங்கின் பகுப்பாய்வினையையும் , குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் பார்க்கலாம் . பிற்றுமின், தொழில் தர பிற்றுமின், மாற்றியமைக்கப் பட்ட பிடுமின் **(CRMB/PMB)** பிட்யூகோட், பிட்யூப்ளாஸ்ட், பிட்யூப்ரீமியர், பிட்யூமன் குழம்புகள், பிட்யூமன் பெயின்ட்ஸ் மற்றும் பிட்யூமன் குழம்பு பொருட்கள் ஆகியவை அடங்கும்.

1. நடைபாதை தர பிட்யூமன்
2. தொழில்துறை தர பிட்யூமன்
3. **CRMB**.. க்ரம்ப் ரப்பர் மாற்றியமைக்கப்பட்ட பிட்யூமன்
4. **PMB**.. பாலிமர் மாற்றியமைக்கப்பட்ட பிற்றுமின்
5. சாலை கட்டுமானத்திற்கான பிட்யூமன் குழம்பு
6. **RPO**.. இரப்பர் பதப்படுத்தும் எண்ணெய்
7. துணை தயாரிப்புகள்/நீர்ப் புகா பொருட்கள்

தீர்வுகள் இந்நிறுவனம், இந்தியாவில் பிடுமின் தயாரிப்பதில் முதன்மை இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது. பிடுமின் என்பது அடர்த்தியான அதிக பிசுபிசுப்பு பெட்ரோலியம் சார்ந்த ஹைட்ரோகார்பன் ஆகும். இது கச்சா எண்ணையை வடிகட்டும் போது எச்சமாக பெறப்படுகிறது.

இந்நிறுவனம் வளர்ந்து வரும் தொழில்நுட்ப துறையின் உதவியுடன் மிக சிறந்த தீர்வுகளை கட்டுமான வல்லுநர் களுக்கு வழங்கி வருகிறது.

இந் நிறுவனமானது ஒருங்கிணைக்கப்பட்ட கடல் மற்றும் சாலை நெட்வொர்க் செயல்பாடுகளின் உதவியோடு தீர்வுகளை வழங்கி வருவதால் இதன் நம்பகத் தன்மை உறுதி செய்ய படுகிறது. இந்நிறுவனம் 29500 மெட்ரிக் டன் மற்றும் 350க்கும் அதிகமான பிட்யூமன் டேங்கர்களின் மொத்த கொள்ளளவு கொண்ட ஐந்து பெரிய கப்பல்களை தன் வசம் வைத்துள்ளது.

இரப்பர் செயலாக்க எண்ணெய் (**RPO**).. பல்வேறு ரப்பர் மற்றும் ரப்பர் அல்லாத வெளியேற்றத் தொழில்களில் முக்கிய பங்கு வகிக்கிறது. இது செயலாக்க செயல்திறனை மேம்படுத்துகிறது. மேம்பட்ட தயாரிப்பு தரத்துடன், நீண்ட கால உழைப்பை அளித்து வருகிறது. மின்சார கட்டணத்தை அதிக அளவில் குறைத்து, ஒட்டுமொத்த செலவுகளை குறைத்து வருகிறது.

### கிடங்குகள் மற்றும் விநியோகம் :

**AICL**, இன்று அங்கீகரிக்கப்பட்ட அசோக் லேலண்ட் பணிமனை மற்றும் பராமரிப்பு வசதிகளுடன் இந்தியா முழுவதும் மொத்தமாக ஸிஊறூ வழங்குவதற்காக 300+ **LPG** டேங்கர்களைக் கொண்டுள்ளது. இந்த ஸிஊறூ உள் நாட்டு சுத்திகரிப்பு நிலையங்களில்இருந்தும் மொத்தமாக இறக்குமதி செய்தும் பின்னர் நுகர்வோருக்கு விநியோகம் செய்து

வருகிறது. முக்கிய வாடிக்கையாளர்கள் பட்டியலில் **IOC**, **BPCL**, **HPCL**, **ASHOKA BUILDCON** மற்றும் இன்னும் பல நிறுவனங்கள் உள்ளன.

எதிர்காலத்தில் எரிசக்தி வளங்களின் பற்றாக்குறையைக் கொண்டு ராஜஸ்தானில் ஜெய்சல்மேரில் இரண்டு காற்றாலை ஆலைகளையும மஹாராஷ்டிரா வின் துலியாவில் மற்றொரு

காற்றாலை நிருவுவதன் மூலம் மரபுசார எரிசக்தி உற்பத்தியில் வணிகத்தைப் பண்முகப் படுத்தியுள்ளது.

30000 **MT** மொத்த சேமிப்பு திறன் கொண்ட 7 மொத்த சேமிப்பு முனையங்கள் இந்தியா முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு மொத்த கொள்கலன்கள் அல்லது டிரம்களில் பிடுமின் மற்றும் பிட்யூமினஸ் தயாரிப்புகளை திறமையாக வழங்குவதற்காக கப்பல் நெட்வொர்க்குகளுக்கு நேரடி அணுகலைக் கொண்டுள்ளது.

## நிறுவனத்தின் அடிப்படை விவரங்கள்:

இந்நிறுவனத்தின் சந்தை மூலதனம் ரூபாய் 1600.48 கோடி. முக மதிப்பு ரூபாய் 10. புத்தக மதிப்பு ரூபாய் 297. இந்நிறுவனத்தின் ஊணசி இன்டஸ்ட்ரியல் **PE** விட குறைவாக இருப்பதால் இப்பக்கத்தை தற்போதைய சந்தை விலையில் வாங்கலாம்.

**Key Metrics**

| | |
|---|---|
| PE Ratio (x)<br>**16.56** | EPS - TTM (₹)<br>**64.91** |
| MCap (₹ Cr.)<br>**1,600.48** | Sectoral MCap Rank<br>**10** |
| PB Ratio (x)<br>**4.06** | Div Yield (%)<br>**0.23** |
| Face Value (₹)<br>**10.00** | Beta<br>**0.63** |
| VWAP (₹)<br>**1,083.88** | 52W H/L (₹)<br>**1,155.00 / 531.15** |

**Agarwal Corp Share Price Returns**

| | |
|---|---|
| 1 Day | -1.93% |
| 1 Week | 3.1% |
| 1 Month | 9.18% |
| 3 Months | 24.41% |
| 1 Year | 67.64% |
| 3 Years | 678.99% |
| 5 Years | 536.85% |

## நிறுவனத்தின் நிதி நிலை :

இந்நிறுவனத்தின் விற்பனையானது கடந்த நிதி ஆண்டில் (2023) ரூபாய் 2016 கோடி ஆகும். இந்நிறுவனத்தின் விற்பனையானது கடந்த பல ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டை விட அதிகரித்து வருவது அதன் நம்பகத்தன்மையை உறுதி செய்கிறது.

### Agarwal Corp Financials

INCOME (P&L) | BALANCE SHEET | CASH FLOW | RATIOS — CONSOLIDATED

**INSIGHTS**

**Quarterly Topline Performance**

Company witnessed QoQ revenue decline of 62.86%, which is lowest in the last 3 years. (Source: Consolidated Financials)

| QUARTERLY \| ANNUAL | SEP 2023 | JUN 2023 | MAR 2023 | DEC 2022 | SEP 2022 |
|---|---|---|---|---|---|
| Total Income | 233.76 | 629.37 | 660.18 | 553.91 | 226.95 |
| Total Income Growth (%) | ↓-62.86 | ↓-4.67 | ↑19.19 | ↑144.07 | ↓-61.08 |
| Total Expenses | 211.90 | 593.51 | 623.27 | 519.90 | 206.95 |
| Total Expenses Growth (%) | ↓-64.30 | ↓-4.77 | ↑19.88 | ↑151.22 | ↓-62.52 |
| EBIT | 21.87 | 35.86 | 36.91 | 34.01 | 20.00 |
| EBIT Growth (%) | ↓-39.03 | ↓-2.84 | ↑8.54 | ↑70.04 | ↓-35.41 |
| Profit after Tax (PAT) | 16.01 | 27.57 | 28.30 | 25.21 | 15.28 |
| PAT Growth (%) | ↓-41.93 | ↓-2.55 | ↑12.22 | ↑64.98 | ↓-34.86 |
| EBIT Margin (%) | 9.35 | 5.70 | 5.59 | 6.14 | 8.81 |
| Net Profit Margin (%) | 6.85 | 4.38 | 4.29 | 4.55 | 6.73 |
| Basic EPS (₹) | 10.71 | 18.43 | 19.56 | 17.63 | 10.93 |

### Agarwal Corp Financials

INCOME (P&L) | BALANCE SHEET | CASH FLOW | RATIOS — CONSOLIDATED

| ANNUAL | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 | FY 2019 |
|---|---|---|---|---|---|
| Total Assets | 749.58 | 543.12 | 395.44 | 300.02 | 227.32 |
| Total Assets Growth (%) | ↑38.01 | ↑37.35 | ↑31.80 | ↑31.98 | ↓-4.53 |
| Total Liabilities | 345.87 | 248.56 | 199.34 | 142.52 | 93.79 |
| Total Liabilities Growth (%) | ↑39.15 | ↑24.70 | ↑39.87 | ↑51.95 | ↓-19.29 |
| Total Equity | 403.71 | 294.56 | 196.10 | 157.51 | 133.53 |
| Total Equity Growth (%) | ↑37.05 | ↑50.21 | ↑24.51 | ↑17.95 | ↑9.54 |
| Current Ratio (x) | 1.53 | 1.63 | 1.69 | 1.43 | 2.01 |
| Total Debt to Equity (x) | 0.34 | 0.50 | 0.62 | 0.54 | 0.51 |
| Contingent Liabilities | 10.14 | - | 5.96 | 5.91 | 5.73 |

## Agarwal Corp Financials

INCOME (P&L) | BALANCE SHEET | CASH FLOW | **RATIOS** | CONSOLIDATED

**INSIGHTS**

**Building-up Cash Reserves**

Company has consistently increased ROE in last 5 years with majority of profits being added to its reserves last year. (Source: Consolidated Financials)

| ANNUAL | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 | FY 2019 |
|---|---|---|---|---|---|
| Return on Equity (%) | 22.85 | 21.62 | 20.66 | 16.22 | 10.06 |
| Return on Capital Employed (%) | 24.81 | 25.64 | 22.80 | 24.35 | 20.60 |
| Return on Assets (%) | 12.30 | 11.72 | 10.25 | 8.51 | 5.91 |
| Interest Coverage Ratio (x) | 11.92 | 8.95 | 7.47 | 5.52 | 3.20 |
| Asset Turnover Ratio (x) | 3.12 | 3.40 | 228.58 | 262.32 | 233.79 |
| Price to Earnings (x) | 9.23 | 13.99 | 3.99 | 1.79 | 12.61 |
| Price to Book (x) | 2.11 | 3.02 | 0.82 | 0.29 | 1.27 |
| EV/EBITDA (x) | 6.61 | 9.01 | 3.41 | 2.52 | 6.18 |
| EBITDA Margin (%) | 7.17 | 6.85 | 8.06 | 6.21 | 7.12 |

## மேம்பட்ட விளக்கப்படம் :

## Technicals

BUY / SELL SIGNALS | PRICE ANALYSIS | PIVOT LEVELS & ATR | **CHART**




## சகநிறுவன ஒப்பீடு:

### RATIO PERFORMANCE

| NAME | P/E (X) | P/B (X) | ROE % | ROCE % | ROA % | REV CAGR [3YR] | OPM | NPM | BASIC EPS | CURRENT RATIO | TOTAL DEBT/ EQUITY (X) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Agarwal Corp | 16.61 | 4.00 | 22.85 | 24.81 | 12.30 | 36.46 | 6.04 | 4.57 | 63.78 | 1.53 | 0.34 |
| DCW Ltd | 21.98 | 3.78 | -1.07 | 1.13 | -0.32 | 26.94 | 1.15 | -0.47 | -0.28 | 0.59 | 1.23 |
| Panama Petro | 10.54 | 2.05 | 24.46 | 31.78 | 18.86 | 30.51 | 13.61 | 10.36 | 38.51 | 3.56 | 0.00 |
| Diamines Chem | 16.64 | 3.58 | 31.14 | 40.61 | 27.73 | 16.47 | 51.09 | 37.90 | 42.84 | 5.44 | 0.00 |

## Agarwal Corp Shareholding Pattern

QOQ CHANGE | TOTAL SHAREHOLDINGS

| CATEGORY | 31 DEC 2023 | 30 SEP 2023 | 30 JUN 2023 | 31 MAR 2023 |
|---|---|---|---|---|
| Promoters | 57.20 | 57.20 | 57.20 | 57.20 |
| Pledge | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| FII | 6.24 | 6.24 | 6.34 | 6.36 |
| DII | 0.14 | 0.08 | 0.07 | 0.00 |
| Mutual Funds | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| Others | 36.42 | 36.48 | 36.39 | 36.44 |

*Showing Agarwal Corp Shareholding as on 31 Dec 2023*

## ஷேர்ஹோல்டிங் பேட்டர்ன்:

## Agarwal Corp Shareholding Pattern

QOQ CHANGE | TOTAL SHAREHOLDINGS

| CATEGORY | NO. OF SHARES | PERCENTAGE | % CHANGE QOQ |
|---|---|---|---|
| Promoters | 85,55,434 | 57.20 % | 0.00 |
| Pledge | 0 | 0.00 % | 0.00 |
| FII | 9,32,667 | 6.24 % | 0.00 |
| DII | 21,100 | 0.14 % | ^0.06 |
| Others | 54,48,588 | 36.42 % | ↓-0.06 |

*Showing Shareholding as on 31 Dec 2023*

## எமது பரிந்துரை:

இந்நிறுவனத்தின் பங்குகளை தற்போதைய சந்தை விலையான ரூபாய் 1060 மற்றும் குறையும் தருவாயில் ரூபாய் 900 வரை வாங்கலாம். இலக்கு 1200,1400,1600+++. கால வரையறை 18 முதல் 24 மாதங்கள்.

## இந்த மாத குறுகிய கால பங்குகள் பரிந்துரைகள்:

1. Southern Petrochemical Industries Corp Ltd... Entry 90 - 95. Accumulate more till 70. Target 110 and 120.

2. HP Adhesives Ltd... Entry 110 - 120. Accumulate more till 90. Target 140 and 160

3. Star Paper Mills Ltd... Entry 260 - 270. Accumulate more till 220. Target 300 and 330

4. Steel Authority of India Ltd... Entry 110 - 120. Accumulate more till 100. Target 140 and 160

5. Indian Oil Corporation Ltd... Entry 150 - 160. Accumulate more till 120. Target 200 and 220

6. Ramco Industries Ltd... Entry 250 - 260. Accumulate more till 200. Target 300 and 330

### பொறுப்புத் துறப்பு

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது

# NAGARATHAAR KAPITAL

**Webinar Course.**
**Stock Market Course (Beginners).**
**Basics, Fundamentals, Technical (Introduction)**
**Stock Market Course (Advanced).**
**Technical, Strategies**

**Why One Wealth Course?**
**Learn from Qualified and Experienced Expert Panelists**
**Your search for in-depth Knowledge ends here.**
**You will become a Professional trader and Informed Investor**
**Got Learn about Different Market**

**Who can join?**

I. Students.
II. Professionals from other sectors who want to become Part time and Full time Trader.
III. Professionals from other sectors who want to formulate their Portfolio. House Wife.
IV. Anyone who wants to make a career in Equity / Commodity / Currency Trading / to become Investment Advisor / to become Financial Advisors.

**Our "Young generation" can learn and start doing analysis and entering in potential stock @ Correct Entry / CorrectExit to win the Trade and Investment in turn around stocks to create wealth by their own in reasonable period of time.**

**Webinar Dates** Every month will post it on our NAGARATHAAR KAPITAL Forum
This month Class will be on Saturday 10th February 2024.

**Webinar Timings** India Time: 17:30Hrs-18.30Hrs In-Week days & 17.00Hrs-18.00Hrs Week Ends.

**# For further Details Contact:** +91-9790755337 +91-9884072224

nagarathar.capital@gmail.com

# நீங்கள் எப்படி... ரிஷப லக்னம்..!

– ஜோதிடர். எல்லி



வானவியல் சாஸ்திரம் என்பது தமிழர்களின் தொன்மையான அறிவியல். இதனை நாம் நகரத்தார் மின்னிதழ் மூலமாக பகிர்ந்து வருவதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழில் மேஷ லக்னத்தை பற்றி பார்த்திருந்தோம். அடுத்ததா காலப்புருச தத்துவத்தின் இரண்டாம் பாவகமான ரிஷபத்தை பார்ப்போம் .

ஸ்திர லக்னமான ரிசபம் நல்லதோ கெட்டதோ எடுத்த காரியத்தில் உறுதியாக நிற்கும் . ஆனால் மெஜாரிட்டி தவறான முடிவுதான் அதை மிக தாமதமாக உணர்வார்கள். பிடிவாதம்,நினைத்ததை சாதிக்கும் மனவலிமை, பல்துறை சார்ந்த புரிதல்,கடின உழைப்பு இதெல்லாம் இவங்க கிட்ட இருக்கும் .

ஒவ்வொரு நடவடிக்கைகளுக்குமான காரண காரியம் என்ன அதனால் நமக்கு எத்தகைய நன்மை?

என்று சிந்தித்து தான் செயல்படுவார்கள். இவர்களின் நட்பு வட்டமும் அதை நோக்கியே அமையும் ஆழம் பார்த்து காலை விட வேண்டும் னு சொல்வழக்கு உண்டு அதாவது தெளிவுற தெரியாமல் ஒரு துறையில் இறங்கி தத்தளிக்க கூடாது என்பதற்காக . இதுவே ரிசபம் னு வைங்க நீரில் இறங்கனும் னா யாரையாவது தள்ளி விட்டு ஆழம் பாக்கணும் அதுதான் நமக்கு நல்லதுனு கூட இருக்கிற யாரையாச்சும் நேக்கா உள்ளே இறக்கி விட்ருவாங்க.

இலவசமாக நிறைய அறிவுரைகள் அள்ளி வீசுவார்கள்.யாருக்கு எதை சொல்லலாம்? யாரெல்லாம் தாங்குவாங்க ?அப்படி எல்லாம் யோசிக்க மாட்டாங்க. கேட்கிறவர்கள் தான் நமக்கு சரிப்பட்டு வருமா பார்த்து நடந்து கொள்ள வேண்டும் ஏன்னா ரிசப லக்ன காரர்களிடம் நாவன்மை இருக்கும்.

அதனால் இவங்க சொல்கிற விதம் கேக்கிரவரை தூண்டி காரியத்தில் இறங்க செய்து விடும்.




கேட்பவர் பாவம் ஏழரைச்சனி நடப்பவரோ, அஷ்டமத்து சனி காரராகவோ இருந்தால் அதோ கதிதான்.நீங்க ஏன் இந்த சொத்துக்களை எல்லாம் விற்றுவிட்டு ஒரு ஆட்டோமொபைல் கடை வைக்க கூடாது னு தொடங்கி இது போல ஐடியாக்கள் குவியும்.

அப்போ இவர்கள் கொடுக்கும் ஆலோசனைகளை கேட்கவே கூடாதா என்றால் அப்படி அல்ல. புத்திக்கூர்மை உள்ள ரிசபம் சிறந்த அறிவுரைகளை கொடுக்கவே செய்யும். அதை யஸருக்கு? எப்போது? என்பதில் பெரியளவில் அக்கறை எடுப்பதில்லை .சில சமயங்களில் நீங்கள் அவர்களின் சோதனை எலிகளாக இருக்கலாம்.


இவர்களில்(ரிசபம்)பெரும்பாலானோர் வேலை அல்லது தொழில் செய்பவர்கள் தான் வேலை வெட்டி இல்லை என்கிற பேச்சுக்கே இடமிருக்காது. காதல் சமூகத்தில் இயல்பானது தான்! ஆனால் ரிசபம் காதலில் தேடிப் போய் வசமாக சிக்கி கொள்வார்கள் , அதில் பிரச்சினை, வம்பு வழக்குகள், ஊரார் பொல்லாப்பு, உறவுகளின் எதிர்ப்பு இதெல்லாம் நடந்து விடுகிறது. காதலுக்கான அடிப்படை காரணம் எதுவுமே பெரிதாக இருக்காது.




வந்தார் -சந்தித்தார் - காதலித்தார்- காதலித்தேன் என்று ரொம்ப சப்பென்று தான் இருக்கும் இவர்கள் காதல் கதை.

இரண்டு மூன்று காதல்களை கடந்து வந்த பிறகு தான் திருமணம் கைகூடுகிறது. எதிலும் லாபநஷ்ட கணக்கு போடும் இவர்கள். காதல் மூலமாக ஆதாயம் எதையும் எதிர்பார்ப்பதில்லை என்பதையும் பாராட்டித்தான் ஆக வேண்டும் .


தந்தையாரோடு சுமுகமான உறவு இருப்பதில்லை.அப்பாவை நேசிப்பவர்கள் அவர்களோடு சேர்ந்து இருக்க முடியாத சூழலில் இருக்கலாம், அல்லது வெளியூர், வெளிநாட்டில் வாழும் நிலை இருக்கிறது. சேர்ந்தே வசிக்கும் தந்தை மகன் வாழ்வில் உறவில் விரிசல், ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முடியாத போக்கினையும் பார்க்கலாம் சனி 9,10 க்குடைய தர்மகர்மாதிபதி கூடவே பாதகாதிபதி ஆகவும் வருகிறார் சனி தசா கலவையான பலன்களை யே கொடுக்கும். பாதகாதிபதி தன்மையை யும் சற்றே செய்து விடுகிறார் சனி பகவான்.ஆண்குழந்தை



இவர்களுக்கு கண்டிப்பாக இருக்கும் தான் இருக்கும் துறையில் புலமை பெற விரும்புவார்கள்.தனக்கு சம்பந்தமில்லாத இதர துறையையும் விட்டு வைக்க மாட்டார்கள் அதை பற்றிய தகவல்கள் அறிந்திருப்பார்கள்.ஆனால் இந்த திறமைக்கு ஜாதகத்தில் புதன்+ சூரியன் சேர்க்கை அவசியம் இந்த லக்கனக்காரர்கள் பணம் விசயத்தில் கறார் பேர்வழிகள்.சம்பாதித்து சேர்த்து வைப்பார்கள்.ஆடம்பர செலவுகள் செய்வதில்லை.மனைவி குழந்தைகள் விசயத்தில் மட்டும் தாராளமாக செலவு செய்வார்கள்.

ரிசப லக்ன ஆண் ஜாதகர்கள் மனைவி வழியில் செட்டிலாகி விடுவார்கள். சகோதரர்கள் வகையில் செலவுகள் அதிகமாக இருக்கும் அதனால் சகோதர பாசம் ரொம்ப குறைச்சல் தான்! இவர்களுக்கு குடும்பத்தில் உள்ள மூத்தவர்கள், பெரியவர்கள் ஆதரவு அவ்வளவாக

இருக்காது! இவர்களும் பெரியவர்களை கண்டால் அப்படியே மடங்கி போய் மரியாதை எல்லாம்கொடுக்கமாட்டார்கள் கண்டும் காணாதது போல கடந்து போய்விடுவார்கள்.



பக்தி ஈடுபாடு பெரிய அளவில் இருக்காது, யதார்த்தமான ஆட்கள் இவர்கள். பெண் ஜாதகர்கள்வேண்டுமென்றால் செவ்வாய், வெள்ளி கிழமைகளில் தெருவில் உள்ள பெண்களுடனோ, உறவினர்கள் உடனோ சும்மா பெயரளவிற்கு கோயிலுக்கு போய் வருவாங்க இது கூட்டத்தோடு கோவிந்தா போடற மாதிரி தான்.

வாழ்வில் ரொம்ப முன்னெச்சரிக்கையாக இருப்பார்கள்.உதவி செய்வதிலும் லாபம் இருந்தால் மட்டுமே செய்வார்கள்.தேவையற்ற, பயனற்ற மனிதர்கள் உறவில் இருந்தால் தவிர்த்து விடுவார்கள். பிரயோஜனம் ஆகிறவர்களை தொடர்ந்து நட்பாக பேசி தக்க வைத்துக் கொள்வதில் கில்லாடிகள் ! அதனால் தனித்திறமை உள்ள நண்பர்கள் மட்டுமே இவர்கள் நட்பு வளையத்தில் இருப்பார்கள்.எந்த துறையிலும் தைரியமாக நுழைந்து தனக்கென்று ஒரு பாதையை ஏற்படுத்துவதில்லை வல்லவர்கள். டேபிள் வொர்க் (IT Fiel,) ஆனாலும் உடலுழைப்பு என்றாலும் செய்ய தயார்தான்.

தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறைகள் , எழுத்து, பத்திரிகை, கணிதம் இவைகள் கைகொடுக்கும் இவர்கள் அதிகம் பயன்படுத்த வேண்டிய நிறம் பச்சை கல் –மரகத பச்சை கடவுள் – திருமால் வழிபாடு மேற்கூறிய பலன்கள் எனக்கு ஒத்து போகலையே என யாரேனும் நினைத்தால் லக்ன பாவம் பலம் இல்லாமல் இருக்கலாம் அல்லது லக்னாதிபதி மற்றும் புதன் வலுவிழந்து செயல்படா நிலைக்கு போய் இருக்கலாம்.



இதுவரை ரிஷப லக்னம் குறித்த செய்திகளை பார்த்தோம். மீண்டும் ஒரு லக்னம் குறித்த செய்திகளுடன் அடுத்த இதழில் சந்திப்போம் .

இராமநாதபுரத்தில் வசிக்கும் ஜோதிடர் எல்லி சட்டம் பயின்றவர் . ஜோதிடம் ,தத்துவம் மற்றும் வரலாறு ஆகியவற்றில் நிபுணத்துவம் கொண்ட இவர் , ஜோதிடம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் தொடர்ந்து எழுதும் டிஜிட்டல் ஜோதிட விற்பன்னர் . தொடர்புக்கு : 99 44 86 59 43



நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

நாம் நகரத்தார்
சமூக இணையதள மின்னிதழ்

நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக
வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல்
மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி
தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின்
பெட்டகமாக ஓர் மின்னிதழ்.

மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும்
உங்கள் கைபேசி வாயிலாக...

நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள்
மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள
எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,

97917 76534

www.naamnagarathar.com